Registered as a News Paper in Sri Lanka.

# தினக்கதிர்

தினசரி

THINAKKATHIR DAILY

දිනක්කතිර්

ஒளி - 01 - கதிர் - 173 03-10-2000 செவ்வாய்க்கிழமை பக்கங்கள் - 08 விலை - ரூபா 5/-



சமய -பிரதேச வேறுபாடுகளில்லா மனிதம் நிறைந்த சேவகனாக...

மட்டக்களப்பு மாவட்டத்தின் பிரஜைகள் முன்னணி வேட்பாளர்

பூ.வி.எம்.ஐ.றஹ்மத்துல்லாஹ்



எனது இலக்கம் 7

குடும்பத்திற்கு ஒருவர் எனக்கு வாக்களியுங்கள்!
அசாத்தியம் என்பதை சாத்தியமாக்குவோம் !

## ஹிஸ்புல்லாஹ்வின் வாகனத் தொடரணி மீது மற்றுமொரு குண்டுத் தாக்குதல்

(ஏறாவூர் நிருபர்)

ஏறாவூரில் நடைபெற்ற தேசிய ஐக்கிய முன்னணிப் பிரசாரக் கூட்டத்தில் கலந்து கொண்டு திருப்பிச் சென்று கொண்டிருந்த பிரதியமைச்சர் எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ்வின் வாகனத் தொடரணி மீது நேற்று மாலை மற்றுமொரு தாக்குதல் இடம்பெற்றுள்ளது.

மட்டக்களப்பு கல்முனை வீதி களுவாஞ்சிகுடியில் இச்சம்பவம் இடம்பெற்றது.

மட்டக்களப்பிலிருந்து கல்முனை நோக்கி சென்று கொண்டிருந்த பிரதியமைச்சரின் வாகனத் தொடரணி மீது இலக்கு வைத்து சைசாஜர் தாக்குதல் இடம்பெற்றுள்ளது.

இத்தாக்குதலில் பொலிஸ் சப் இன்ஸ்பெக்டர் உட்பட நான்கு பொலிசார் காயமடைந்துள்ளனர். ஜீப் வண்டி சேதத்துக்குள்ளாகி உள்ளது. இத்தாக்குதலைத் தொடர்ந்து இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் களுதா வளையைச் சேர்ந்த பதின்மூன்று வயதுடைய மாணவனான சுரேஸ் எனும் சிறுவன் உயிரிழந்துள்ளார். மேற்படி சிறுவனின் தந்தையரான இ. கணேஸ் என்பவர் காயமடைந்துள்ளார்.

சைக்கிள் ஒன்றில் பொருத்தப்பட்டிருந்த மேற்படி சைசாஜர் குண்டு பிரதியமைச்சரை இலக்கு வைத்தே தாக்குதல் நடத்தப்பட்டதாக பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இச்சம்பவத்தைத் தொடர்ந்து பொலிசாரும் அதிரடிப்படையினர் களுவாஞ்சிகுடிப் பிரதேசத்தை

(8ம் பக்கம் பார்க்க)

# மூதூரில் குண்டுவெடிப்பு !

## பொ.ஐ.முன்னணி வேட்பாளர் உட்பட இருபது பேர் பலி! ஐம்பதுக்கு மேற்பட்டோர் காயம்.மூதூர் சோக மயம்

(மூதூர், திருமலை ,ஏறாவூர் நிருபர்கள்)

**நேற்று மாலை 6.30 மணியளவில் இடம்பெற்ற தற்கொலைக் குண்டுத் தாக்குதலில் திருமலை மாவட்ட பொதுஜன ஐக்கிய முன்னணி வேட்பாளர் எல்.எச்.எம்.. உவைதுல்லா (36) உட்பட 20 பேர் உயிரிழந்துள்ளனர்.. இச்சம்பவத்தை தொடர்ந்து மூதூர் நகர் சோகமயமாகக் காட்சி தருகிறது.**

மூதூர் பிரதான வீதியில் அமைந்துள்ள கலாசார நிலைய மண்டபத்தில் இடம்பெற்ற தேர்தல் பிரசார கூட்டத்தை முடித்துக் கொண்டு வெளியே வந்த சமயம் எதிர்பாராதவிதமாக வந்த ஆடவர் ஒன்று மோதியதால் இத்தாக்குதல் இடம்பெற்றுள்ளது.

இதில் ஐம்பதுக்கு மேற்பட்டோர் படுகாயமடைந்துள்ளனர். பலத்த காயத்துக்குள்ளானோர் கடற்படைப் படகுகள் மூலம் திருகோணமலைக்கு எடுத்து வரப்பட்டு ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இவர்களில் எட்டுப்பேரின் நிலை கவலைக்கிடமாகவுள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இத்தற்கொலைக் குண்டுத் தாக்குதல் தொடர்பாக மூதூர் நகரில் பதட்டம் நிலவியது.

நிலமையை வழமைக்கு கொண்டுவர வீதிகளில் எவரையும் நடமாட வேண்டாம் எனவும் உடனடியாக வீடுகளுக்கு கலைந்து செல்லுமாறும் பாதுகாப்பு படையினர் கேட்டுள்ளனர் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டதொரு நிலை காணப்படுவதாக எமது நிருபர் தெரிவித்துள்ளார்.

மரணமான வேட்பாளர் பொலிஸ் புலனாய்வுப் பிரிவின் பொலிஸ் பரிசோதகராக கடமையாற்றியுள்ளார். பின்னர் அமைச்சர் அஷ்

(8ம் பக்கம் பார்க்க)

### யாழ் நகருக்குள் புலிகள் ஊடுருவலாம்

## படையினர் துப்பாக்கி சூடு

(யாழ் நிருபர்)

யாழ்நகரப் பகுதிக்குள் எந்த நேரத்திலும் புலிகள் ஊடுருவலாம் என்ற கருத்து தற்போது படைத்தரப்பினருக்கு ஏற்பட்டுள்ளது. இதன் காரணமாக யாழ் நகரில் உள்ள படையினர் துப்பாக்கி பிரயோகம் மேற்கொண்டு வருவதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

ரிவிகிரண ஒன்று நடவடிக்கையின் பின்னர் யாழ்நகரில் நேற்று துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டதாக பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

## சுயேச்சைக்குழு வேட்பாளரை சுட எத்தனித்த வாலிபர் தப்பி ஓட்டம்

(செங்கலடி நிருபர்)

செங்கலடியில் நேற்றுக் காலை தேனீர் கடை ஒன்றின் முன்பாக வந்த சுயேச்சைக்குழு ஒன்று வேட்பாளர் காத்தமுத்து விஸ்வ லிங்கம் என்பவரை சுட எத்தனித்த இனந்தெரியாத பிஸ்ரல் வாலிபர் ஒருவரை அவர் பிடிக்க எத்தனித்தவேளை தப்பி ஓடியுள்ளார்.

(8ம் பக்கம் பார்க்க)

## மாணவன் மீது துப்பாககிச் சூடு

(செங்கலடி நிருபர்)

கடந்த சனிக்கிழமை கோரகல்வி மடுவில் பிரதியமைச்சர் ஹிஸ்புல்லாஹ் மீது நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தின் பின்னர் இடம்பெற்ற சூட்டுச் சம்ப

(8ம் பக்கம் பார்க்க)

## அகிலேஸ்வரனை விடுதலை செய்ய நீதியரசர்கள் உத்தரவு

(நமது நிருபர்)

மட்டக்களப்பு மாவட்ட தேசிய ஐக்கிய முன்னணி வேட்பாளரான எஸ். அகிலேஸ்வரனை விடுதலை செய்யுமாறு உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

(8ம் பக்கம் பார்க்க)

### வரதர் பேசுகிறார்

இன்று மாலை 4.30 மணிக்கு இலங்கை ரூபவாஹினி அலைவரிசை -01இல் முன்னாள் வடக்குக் கிழக்கு முதலமைச்சர் அ.வரதராஜப்பெருமாள் உரைநிகழ்த்தவுள்ளார்.



சுயேச்சை குழு-1 இல்

மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்றத் தேர்தலில்

இரா. துரைரெட்ணம் (ரெட்ணம்) தலைமையில்

மீன் சின்னத்தில் போட்டி



சுயேச்சைக் குழு (1)





மீன்பாடும் தேன்நாடு வளர்ச்சி பெற மீன் சின்னத்துக்கே வாக்களிப்போம்

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி (EPRLF)

# தினக்கதிர்

த.பெ. இல: 06
07, எல்லை வீதி தெற்கு,
மட்டக்களப்பு.
தொ. பே. இல : 065 - 23055, 24821
பெ(F)க்ஸ் : 065 - 23055
E-mail :- tkathir@snet.lk


## ''நெஞ்சில் உரமின்றி... நேர்மைத் திறமுமின்றி....''

நாடு தனது 10வது பாராளுமன்றத்திற்கு விடைகொடுத்து, பதினோராவது பாராளுமன்றத்துக்கான பிரதிநிதிகளைத் தெரிவு செய்வதற்காக, ஒரு தேர்தலைக் சந்திக்கத் தயாராக இருக்கிறது.

தேர்தலுக்கான ஆயத்தங்கள் முன்னெப்போதையையும் விட இம்முறை வெகு விமரிசையாக நடைபெற்று வருகிறது.

பாராளுமன்றத்துக்குத் தேவையான 225 மொத்த அங்கத்தவர்களுள் தேசியப்பட்டியலில் 29 பேர் தெரிவாக மிகுதி 196 ஆசனங்களுக்காக ஆயிரக்கணக்கில் வேட்பாளர்கள் போட்டி போட்டுக் கொண்டு நிற்கிறார்கள்.

ஒரு ஜனநாயக நாட்டுக்குத் தேர்தல் மிக அவசியமானது. 'மக்களால் தேர்ந்தெடுக்கப்படுகின்ற அரசு' என்ற முறைமைக்குள் நிற்கும் நாடு ஒன்றில், மக்களின் தெரிவானது தேர்தல்கள் மூலமே செய்யப்படுகின்றது.

ஆனால் ஏமாத்துக்களும், ஆள்மாறாட்டங்களும், கள்ள வோட்டுக்களும் வாக்குச் சீட்டுக்களவுகளும் என அரங்கேறும் எமது தேர்தல் நாடகத்தை எந்த வகையில் நாம் ஜனநாயகம் என்பது?

மக்களுடைய தெரிவு சுதந்திரமாக நடைபெற வேண்டுமாயின், அவர்கள் சுதந்திரமாகச் சிந்தித்து செயற்பட அனுமதிக்கப்பட வேண்டும். ஆனால், இங்கு நடப்பது என்ன?

என்னென்னவிதமான பொய்களைச் சொல்லி மக்களை மூளைச் சலவை செய்து நமக்கு வாக்களிக்கச் செய்யலாம் என்பதிலேயே அனைத்துக் கட்சிகளும், வேட்பாளர்களும் மும்முரமாக முனைகின்றனர்.

வாக்களிப்பது எப்படி மக்களின் உரிமையோ அந்தளவுக்கு தம்முடைய கொள்கைகளை, எதிர்காலத் திட்டங்களை மக்களுக்கு விளக்குவது அல்லது பிரசாரம் செய்வது கட்சிகளின் வேட்பாளர்களின் உரிமையே.

ஆனால், இவர்கள். இதயசுத்தியுடன் உண்மையான தமது கொள்கைகளையும், சாத்தியமான செயல்திட்டங்களையும்தான் பிரசாரம் செய்கிறார்களா என்பதுதான் இங்குள்ள கேள்வி. தேர்தலில் போட்டியிடுவதற்கு வேட்பாளர்கள் தமது சுயவிருப்புடனே முன்வருவது வழமை. அதுவும் அவர்களது உரிமை.

ஆனால் இம்முறை தேர்தலில் ஒவ்வொரு கட்சிகளும் வேட்பாளர்களைத் தேடி வலைவீசி திரிந்தமையை நேரடியாகவே காண முடிந்தது.

இம்முறை தேர்தலில் நிற்கும் வேட்பாளர்கள் பலர். இந்தத் தேர்தலுக்காகவே குறிப்பிட்ட கட்சிகளை அல்லது சுயேச்சைக் குழுக்களை பிரதிநிதித்துவப்படுத்துவதற்காக புதிதாக தெரிவு செய்யப்பட்டவர்கள். இவர்களுக்கு இந்தக் கட்சிகள் அல்லது குழுக்கள் புதியவை எனின், இவர்களுக்கும் இந்தக் கட்சிகளின் கொள்கைக்கும் என்ன தொடர்பு இருக்கப் போகிறது உண்மையில் அனேகமான கட்சிகளுக்குக் கொள்கை என்று ஒன்றே இருப்பதில்லையே, இந்நிலையில் இவர்களைப் பற்றிப் பேசி என்ன?

இவ்வளவும் நாம் அறிந்த பல வேட்பாளர்னகளின் நிலை.

இம்முறை தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் பலரை மக்கள் யாரென்றும் அறியமாட்டார்கள்.

ஐந்து ஆசனங்களே கொண்ட மட்டக்களப்பு மாவட்டத் தேர்தலில்., 168 பேர் அந்த ஆசனங்களுக்காகப் போட்டியிடுகின்றனர்.

168 பேரை எப்படி இனங் காண்பது நினைவில் வைத்துக் கொள்வது என்பதே சிக்கல்.

அது ஒருபுறமிருக்க, இவர்களுள்ளும் பரவலாகப் பேசப்பட்டவர்கள் அல்லது அறியப்பட்டவர்களே யார் என்பதில் இப்போது புதிய குழப்பங்கள் தோன்றியுள்ளன.

மட்டக்களப்பு மாவட்டத்தில் தேர்தலில் போட்டியிடும் தே.ஐ.மு.தலைமை வேட்பாளர் செல்லையா இராசதுரை ஒரு பழம்பெரும் அரசியல்வாதி.

இவர் இக்கட்சியில் போட்டியிடுவது தொடர்பாகவும் சற்றுப் பரபரப்பாகப் பேசப்பட்டது.

ஆனால், மலேசியாவில் வசித்துவரும் இவர் உண்மையில் வேட்புமனுவில் கையெழுத்திடவில்லை எனவும், எனவே இக்கட்சியின் வேட்புமனுவை இரத்தச் செய்யுங்கள் எனவும் மற்றுமொரு கட்சி வழக்குத் தாக்கல் செய்தது.

இப்போது அந்த இராசதுரை வேறு. இவர் வேறு என்ற ஓர் கதை புதிதாக அடிபடுகிறது.

இவ்வாறான கதைகள், ஏற்கனவே இக்கட்சிகள் யாழ் மாவட்ட வேட்பு மனுவில் இடம்பெற்ற பெயர்கள் தொடர்பாகவும் சொல்லப்பட்டன.

உலகில் ஒருவரது சாயலில் ஏழுபேர் இருப்பாராம் என்ற தொரு ஐதீகம் உண்டு.

இங்கு ஒரே பெயரிலுள்ள பலரை ஆள்மாறாட்டம் செய்து தேர்தலில் வென்ற பெருமை இலங்கையின் அடுத்த சிறுபான்மை இனத்துக்குக் கிடைக்கப்போகிறது போலும்.

''நெஞ்சில் உரமும் இன்றி நேர்மைத் திறமும் இன்றி'' எப்படியோ பாரளுமன்றம் போனால் சரி என்று நினைத்து போட்டியில் குதித்தால் இனி என்னென்னதான் செய்ய முடியாது?

பாவம் மக்கள், மறுபடியும் மறுபடியும் ஏமாந்து போவார்கள் தானே.

# சமாதானப் பேச்சுவார்த்தைகளுக்கு முற்றுப்புள்ளி வைத்த கடிதங்கள்

**தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் அரசாங்கத்திற்குமிடையே 1994-1995 காலப்பகுதியில் நடைபெற்ற பேச்சுவார்த்லைதகளில் முழு விபரங்களையும் தெரிவிக்கும், 'The Politics of Duplicity - revisiting the Jaffna talks' எனும் நூலினை விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்டன் பாலசிங்கம் எழுதி வெளியிட்டுள்ளார். அந்நூல் பற்றி 'சண்டே லீடரில்' வெளியான 'சோனாலி சமரசிங்க'வின் ஆய்வுக் கட்டுரையின் தமிழ் வடிவினை இங்கு தருகின்றோம்.**

1995. ஏப்ரல் 19ம் திகதியன்று திருகோணமலை துறைமுகத்தினுள் வைத்து கடற்புலிகள் இயக்கத்தினர் இலங்கை கடற்படையினரிற்குச் சொந்தமான இரண்டு வள்ளங்களை மூழ்கடித்தனர். இத்தாக்குதல் 1994 செப்ரெம்பர் மாதம் ஆரம்பிக்கப்பட்ட சமாதானப் பேச்சவார்த்தைகளிற்கு முட்டுக்கட்டையாக அமைந்தது.



1994 செப்ரெம்பர் தொடக்கம் 1995 ஏப்ரல் வரையிலான 6மாத இடைவெளியில் அரசிற்கும். தமிழ்ஈழ விடுதலைப் புலிகளிற்கும் இடையில் 42 கடிதங்கள் பாமாறப்பட்டன. இவற்றுள் அனேகமானவை ஜனாதிபதி சந்திரிகாவிற்கும், புலிகள் இயக்க தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனிற்கும் இடையிலேயே பரிமாறிக் கொள்ளப்பட்டவை.

19994 செப்ரெம்பர் 2ம் திகதியன்று பிரபாகரன் வெளியிட்ட உத்தியோகபூர்வமான அறிக்கையில் புதிய ஜனாதிபதியின் நிபந்தனைகள் இல்லாத பேச்சுவார்த்தைக்கான அழைப்பைத் தான் வரவேற்பதாகவும் தெரிவித்திருந்தார்.

ஒரு வர்ரத்தின் பின்னர் சமாதான பேச்சுவார்த்தைகளில் கலந்து கொள்ள முன்வந்தமையைப் பாராட்டி ஜனாதிபதி சந்திரிகாவும் பதில்க் கடிதம் அனுப்பினார். செப்ரெம்பர் 21ம் திகதியன்று பிரபாகரனிற்குக் கிடைத்த மற்றுமோர் கடிதத்தில் அரச தரப்பின் சார்பாக சமாதான பேச்சுவார்த்தைக்குக் கலந்து கொள்ளவுள்ளோரது பெயர்ப் பட்டியல் பிரசுரிக்கப் பட்டிருந்தது. இதில் கே.பால்பட்ட பெந்தி, லயனல் பெர்ணாண்டோ. ஆர். ஆசிர்வாதன் ஆகியோருடன் என்.எல்.குணரத்ன ஆகியோரது பெயர்கள் காணப்பட்டன. இது புலிகள் இயக்கத்தினரைப் பெரிதும் ஏமாற்றத்திற்கு உட்படுத்தியது.

**இன்னும் ஒரு விடயம் சொல்லப்படுவதற்கு உண்டு. புலிகள் இயக்கத்தினர் பேச்சுவார்த்தை காலத்தில் எச்சரிக்கை எதுவும் இன்றி தாக்குதலை மேற்கொண்டதற்காக அவர்கள் மீது பழி சுமத்தினாலும் பரிமாறப்பட்ட கடிதங்களிற்கு அமைய அவர்கள் எச்சரிக்கை விடுத்து இருந்தது. தெட்டத்தெளிவாக விளங்குகின்றது. இந்தக் கடிதங்களில் இருந்து மேலும் விளங்குவது என்னவென்றால் ஏப்ரல் 19,1995 ஆம் ஆண்டு கடற்படையினர் மீது மேற்கொண்ட தாக்குதல் பற்றி அரசு ஏற்கனவே அறிந்திருந்தது.**

இருந்தாலும் புலிகள் இயகக்கத்தின் சார்பில், அவ் இயக்கத்தின் அரசியல் பிரிவுப் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வன் தலைமையில் பேச்சவார்த்தைகள் தொடர்ந்தது.


1994 ஒக்டோபர் 13ம் திகதி அன்று காலையில் யாழ் பல்கலைக் கழகத்தின் திறந்த மைதானத்தின் நடுவே அரசின் பிரதிநிதிகளை தாங்கிய "ஹெலிகப்டர்" ஒன்று தரையிறங்கியது. இங்கு புதுப்பிக்கப்பட்ட சமாதானத்தின் வருகைக்காக ஆவலுடன் அரச பிரதிநிதிகளை வரவேற்றனர். புலிகள் தரப்பினரும் இவர்களுக்கு அமோகமான வரவேற்பை அளித்தனர்.

இவ்வாறு இருக்கையில் ஒக்டோபர் 23ம் திகதியன்று சுற்றுப் பேச்சுவார்த்தைக்கு முன் எதிர்கட்சித் தலைவர் காமினி திசாநாயக்க கொழும்பில் வைத்து தற்கொலை குண்டுதாரர் ஒருவரது இலக்கிற்கு ஆளானார். இச்சந்தர்ப்பத்தில் ஐக்கிய தேசியக் கட்சியினர் புலிகள் இயக்கத்தின்ர் மீது பழியை சுமத்தினாலும் பொதுஜன ஐக்கிய முன்னணி அரசு அவசரபட்டு புலிகள் மீது குற்றம் சாட்டவில்லை. இருந்தாலும் அரசு விசாரணையொன்றுக்கு உத்தரவிட்டது. இவ்விசாரணை முற்றுமுழுதாக செயற்படவில்லை. இந்நிகழ்வு பொதுமக்களது கவனத்தை ஈர்த்தது மாத்திரம் அல்ல. இந்த குண்டுத் தாக்குதலின் போது புலிகள் இயக்கத்தினருக்கு பொதுஜன ஐக்கிய முன்னணி அரசு உதவி இருக்கலாம் என அனேகமானோர் அரசின் மீது சந்தேகம் பட்டனர்.

நொவம்பர் 12ம் திகதி முதல் 19ம் திகதி வரையிலான காலப் பகுதியில் புலிகள் இயக்கத்தினர் யுத்தநிறுத்தத்தை அறிவித்தனர். இது சந்திரிகா குமாரதுங்க அவர்களது பதவியேற்பை கௌரவிக்கும் முகமாக நடைபெற்றது.

இருப்பினும் பிரபாகரன் அனுருத்த ரத்வத்தேவுக்கு 20.11.2000 அன்று அனுப்பிய கடிதத்தில் கடந்த வாரம் நாங்கள் யுத்த நிறுத்தம் செய்திருந்தாலும் எதிர்பாராத விதமாக உங்களது இரணுவத்தினர் யுத்தத்தில் ஈடுபட்டுள்ளனர். இவர்கள் புலிகள் இயக்கத்தினரிற்கு எதிராக தாக்குதல் நடத்தியது மாத்திரம் அன்றி. தமிழ் பொதுமக்கள் மீதும் தாக்குதல்களைத் தொடுத்தும் இருக்கிறார்கள். இது எங்களை ஏமாற்றத்துக்குள்ளாக்கியுள்ளதுடன் மிகவும் மனவருத்தத்துக்கும் உள்ளாக்கியுள்ளது." என அவரது கடிதத்தில் தெரிவித்ததிருந்தார். தொடர்ந்து அவரது கடிதத்தில்

நெடுங்கேணி பகுதியில் இடம் பெற்ற சம்பவத்தில் எங்களது முன்னோடி கொமோண்டக்களில் ஒருவரான லெட்டினன்ட் கேணல் அமுதனை மறைந்திருந்த படையினர் தாக்கினர். தாக்குதலில் மரமணடைந்த இவரது சடலத்தை செஞ்சிலுவைச் சங்கத்தின் மூலம்



இராணு வத்தினரிடம், பெற்றுத் தருமாறு விடுத்த கோரிக்கைக்கு இணங்க இராணுவத்தினரிடம் வேண்டுகோள் விடுத்த செஞ்சிலுவைச் சங்கத்தினரிற்கும் மறுப்புத் தெரிவித்துள்ளனர் என அக்கடிதத்தில் குறிப்பிட்டிருந்தார்.

இதையடுத்து அனுருத்த ரத்வத்த நொவம்பர் 22ம் திகதியன்ற அனுப்பிய பதில் கடிதத்தில் நடந்த

**'சோனாலி சமரசிங்க'**
**தமிழில் : றஞ்சன்**

சம்பவத்தை ஏற்றுக் கொண்டதுடன் தான் இச்செயலை வன்மையாகக் கண்டிப்பதாகவும் இது தொடர்பாக உடனடி விசாரணைகளை மேற்கொள்வதாகவும் தெரிவித்திருந்தார்.

அண்மையில் விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்டன் பாலசிங்கம் வெளியிட்டுள்ள புத்தகத்தில் ஆவலைத் தூண்டக்கூடிய பல புகைப்படங்களும் கைமாற்றப்பட்ட 42 கடிதங்களினதும் புகைப்படங்களும் வைக்கப்பட்டிருந்தது. இவை 1974ஆம் ஆண்டின் இறுதிப்பகுதியிலும் 1995 ஆம் ஆண்டின் முற்பகுதியிலும் நிலவிய பேச்சுவார்த்தைக் காலத்தில் எடுக்கப் பட்டவை ஆகும்.

புலிகள் இயக்கத்தினர் அரசியல் ஆலோசகரும் அனுபவமிக்கவருமான அன்டன் பாலசிங்கம் தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் இயக்கத்தினரின் கொள்கைகளுடன் தொடர்புடையவருமான சுமார் 23 வருடங்கள் இருந்துள்ளார். இங்கு பார்வையிடப்பட்ட இப்புத்தகத்தில் அன்டன் பாலசிங்கம் இப்புத்தகத்தின் மூலம் ஜனாதிபதி சந்திரிகாவிற்கு வாங்குவதற்கு முற்பட்டாவது 1995ம் ஆண்டு அரசாங்கத்திற்கும் புலிகள் இயக்கத்தினரிற்கும் இடையிலான பேச்சுவார்த்தைகள் ஏன் பலிக்கவில்லை என்பதேயாகும்

இந்நூல் தகவல்களை மாத்திரம் வழங்காது கடந்த 18 வருட காலங்களாக நீடிக்கும். இரத்தம் செறிந்த போரின் அடிப்படைக் காரணிகளையும் ஆராய்கிறது. இந்த நூலை ஒருவர் தன்னுடைய சொந்த அறிவுடன் தானாக வாசிக்க வேண்டும். அதன் பின்ரே அவர் ஒரு முடிவிற்கு வர வேண்டும்.

*(நாளை தொடரும்)*

# மீண்டும் பாலஸ்தீன — இஸ்ரேல் மோதல் நான்கு நாட்களில் 34 பேர் பலி.

(ஜெருஸலம்)

இஸ்ரேலியருக்கும் பாலஸ்தீனருக்குமிடையே நடைபெற்றுவரும் மோதல்களில் நடந்த நான்கு நாட்களில் 34 பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

பாலஸ்தீனருக்கும் இஸ்ரேலிய பாதுகாப்புப்படையினருக்கும் காஸா பள்ளத்தாக்கில் தொடர்ந்து மோதல்கள் நடைபெற்று வருகிறது.

நேற்றைய மோதலில் மட்டும் இஸ்ரேலிய பாதுகாப்பு உத்தியோகத்தர் உட்பட 12 பேர் இம்மோதலில் கொல்லப்பட்டதுடன் 300க்கும் மேற்பட்டவர்களும் இதில் காயமடைந்துள்ளனர்.

தீவிரமடைந்துள்ள இம்மோதல்கள் குறித்து சர்வதேச சமூகம் கவலையுற்றுள்ளது.

பாலஸ்தீன இஸ்ரேலிய பிணக்கினை தீர்த்து வைப்பதற்காக கடந்த காலங்களில் அமெரிக்காவில் நடைபெற்ற காம் டேவிட் பேச்சுக்கள் பெரும் தோல்வியையே இறுதியில் வழங்கியது.

அதன் பின் பாலஸ்தீன அதிபர் பாலஸ்தீனத்தை தன்னிச்சையாக பிரகடனப்படுத்தும் முகமாக பல நாடுகளுக்கும் விஜயம் மேற்கொண்டு அந்நாட்டுத் தலைவர்களை சந்தித்து தமது பாலஸ்தீனப் பிரகடனத்துக்காக ஆதரவு தேடி வந்தார்.

இருந்த போதிலும் எதுவுமே கை கூடாத நிலையில் திரும்பவும் மோதல்கள் தீவிரமடைந்துள்ளது.

இச்சம்பவங்கள் குறித்து ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகம் கோபி அனான் இஸ்ரேலிய பிரதமர் எகுட் பராக்குடனும், பாலஸ்தீன ஜனாதிபதி யஸீர் அறபாத்துடனும் தொடர்பு கொண்டு தீவிரமடைந்துள்ள மோதல்களின் பதட்ட நிலையை குறைக்குமாறு கேட்டுள்ளார்.

இச்சம்பவங்களை அமெரிக்க ஜனாதிபதி பில் கிளின்டன் கண்டித்துள்ளார் எனவும் இரு தரப்பினரும் உணர்ச்சி வசப்பட்ட நிலையில் உள்ளார்கள். எனினும் இப்பிரச்சினைகளுக்கு பேச்சுக்கள் மூலம் தீர்வு தேட வேண்டுமே ஒழிய வீதிகளில் அல்ல எனவும் வெள்ளை மாளிகைப் பேச்சாளர் குரோலி தெரிவித்துள்ளார்.

அதே சமயம் சவூதி அரேபியா, எகிப்து உட்பட பல நாடுகள் வன்முறைகளுக்கு இஸ்ரேல் காரணம் என சாடியுள்ளன. லெபனான் உட்பட பல நாடுகள் இஸ்ரேலியரின் அத்துமீறல்களை முடிவுக்கு கொண்டுவர வேண்டும் என்று சர்வதேச சமூகத்திடம் வேண்டுகோள் விடுத்துள்ளன.




## ஈராக் செல்லும் பென்சில் அனுமதிக்க சவூதிக்கு கோரிக்கை

(பாக்தாத்)

ஈராக் நாட்டுக்கு 1990-ம் ஆண்டுக்கு பின்னர் எந்த ஒரு பொருளும் செல்லக் கூடாது என்று தடை விதிக்கப்பட்டது. ஆனால் இதையும் மீறி சில நாடுகள் பொருட்களை அனுப்பின. இதில் ஈராக் குழந்தைகளின் கல்விக்காக பென்சில்கள் ஒட்டகங்கள் மூலம் கொண்டு செல்லப்பட்டன. பென்சிலை வைத்து வேதியியல் ஆயுதம் தயாரித்து விடுவரோ என்று கருதிய மேலை நாடுகள் இதற்கும் தடை விதித்தன.

தற்போது ஐக்கிய அரபு குடியரசுகளில் இருந்து கொண்டு செல்லப்படும் பென்சில்களை தங்கள் நாட்டின் வழியாக கொண்டு செல்வதை சவூதி அரேபியா தடை செய்துள்ளது. 1 மில்லியன் பென்சில்கள் சவூதி, வழியாக ஈராக்குக்கு அனுப்பி வைக்கப்பட்டன. இதனை சவூதி அரசு தடுத்து விட்டது. இதற்கு ஐக்கிய அரபு குடியரசு அமைப்பின் ஷேக் சாத்பின் தாயின் அல் மன்சூரி எதிர்ப்பு தெரிவித்து சவூதி அரசுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார். அதில் பென்சில்கள் ஈராக்கில் உள்ள மக்களுக்காக அனுப்பப்படுகின்றது என்று குறிப்பிட்டுள்ளார்.

1990-க்கு பின்னர் சவூதி அரேபியா, குவைத், கட்டார், ஓமான், பஹ்ரைன் ஆகியவை ஈராக்குடன் தொடர்பு கொள்ளவில்லை. ஐக்கிய அரபு குடியரசு மட்டுமே தனது உறவை ஈராக்குடன் வைத்துள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## விபச்சார குற்றச்சாட்டில் கொதித்து போன ஜப்பான் பிரதமர்

(டோக்கியோ)

ஜப்பானிய பிரதமர் யோஷிரோ மோரி மீது செக்ஸ் குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ளது. 1958-ம் ஆண்டு ஜப்பானிய பொலீசார் விபச்சார வழக்கில் மோரியைப் பிடித்தனர் என்று ஜப்பானிய பத்திரிகை ஒன்று புலனாய்வு செய்தி வெளியிட்டு இருந்தது. இதனால் மோரி கடும் ஆத்திரம் அடைந்துள்ளார். தன் மீது குற்றச்சாட்டு சுமத்தி உள்ள பத்திரிகைக்கு எதிராக வழக்கு தொடர உள்ளதாகவும் அவர் அறிவித்து உள்ளார்.

இது குறித்து அவர் கூறுகையில் எனது மானம் மரியாதையை காப்பாற்ற போராடுவேன் என்றும் கூறி உள்ளார். மேலும் அவர் இது ஒரு முக்கியமான சமாச்சாரமா ? நீங்கள் எல்லாம் இதை நம்புகிறீர்களா ? என்று மேல் சபை கூட்டத் திலும் கேள்வி எழுப்பி உள்ளார். நீங்களும் அந்த பத்திரிகையுடன் இணைந்து கொள்ளாதீர்கள் என்று கூறிய மோரி இதற்காக நீங்கள் எது வேண்டுமானாலும் கூறுங்கள் நான் ஏற்றுக் கொள்கிறேன். ஆனால் எனது மரியாதை காப்பாற்ற நான் போராடுவேன் என்று தனது சபை உறுப்பினர்களை நோக்கி விரக்தியில் ஓலம் விட்டு விட்டார். அதோடு தன்னை தூய்மையானவன் என்று நிரூபிக்க சபதம் ஏற்றுள்ளதாக கூறி உள்ளார்.

## நோபல் பரிசு பெறுவோர் எண்ணிக்கை உயர்வு

(ஒஸ்லோ)

நோர்வே நாட்டில் உள்ள நோபல் பரிசு கமிட்டியின் இறுதிச் சுற்று கூட்டம் ஒஸ்லோ நகரில் நடந்தது. இதில் நோபல் பரிசு பெறுவோரின் இறுதி பட்டியல் உறுதி செய்யப்பட்டுள்ளது. இதன் கடைசி கூட்டம் அக்டோபர் 13-ந் தேதி கூடும் போது நோபல் பரிசு பெறுவோர் பட்டியல் அறிவிக்கப்பட இருக்கிறது. இதனை நோர்வே நோபல் நிலையத்தின் இயக்குனர் கெர் லண்டேஸ்டட் தெரிவித்து உள்ளார். 2000 ஆண்டுக்கான நோபல் பரிசு பெறுவோரின் எண்ணிக்கை 150 ஆக உயர்ந்துள்ளது. இதில் 35 அமைப்புகளும் அடங்கும். இந்த பட்டியலில் அமெரிக்க அதிபர் பில் கிளின்டன், முன்னாள் அதிபர் ஜிம்மி கார்ட்டர், தென் கொரிய அதிபர் கிம்டே ஜோங் ஆகியோரின் பெயர் இடம் பெற்றுள்ளன என்று தூதரக தகவல்கள் தெரிவிக்கின்றன. இதில் அமைதிப் படை உட்பட ஐ.நா.வின் பல உள் அமைப்புகளும் நோபல் பரிசுக்கு தெரிவாகி உள்ளன. இந்த ஆண்டு அமைதிப் பரிசின் தொகையும் 9 மில்லியன் சுவீடன் குரோனர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

## டயானா பற்றிய புத்தகம் இளவரசர் வில்லியம் வருத்தம்

(லண்டன்)

இங்கிலாந்தில் சமீபத்தில் டயானாவை பற்றிய புத்தகம் வெளியிடப்பட்டுள்ளது. டயானாவை தாக்கி எழுதப்பட்டுள்ள புத்தகத்தினால் இளவரசர் வில்லியம் மற்றும் அவர் சகோதரர் ஹரி ஆகியோர் வருத்தம் அடைந்துள்ளதாக செய்திகள் தெரிவிக் கின்றன.

டயானாவின் தனி செயலாளராக இருந்த 'பேட்ரிக் ஜெப்சன்' சமீபத்தில் டயானாவை தாக்கி புத்தகம் எழுதியுள்ளார். 'ஸ்கீமிங் லையர்' என்ற பெயருடைய இப்புத்தகம் 'சதி செய்கிற பெயர்' என்ற அர்த்தமுடையது. இப்புத்தகத்தில் இவர் டயானாவை கடுமையாக தாக்கி எழுதியுள்ளார்.

இந்த புத்தகம் குறித்து இளவரசர் வில்லியம் மற்றும் அவர் சகோதரர் ஹரி ஆகியோர் வருத்தம் அடைந்துள்ளனர். வில்லியமுக்கு தற்போது வயது 18 ஆகும். இதனால் இவர் 10 வாரங்கள் சிலியிலும் , 10 வாரங்கள் படகோனியாவிலும் சுற்றுலா செல்ல இருப்பதாக கூறினார்.

இவர் ஸ்காட்லாந்தில் உள்ள ஆண்ட்ரூவ் பல்கலைகழகத்தில் வரலாற்று பட்டப்படிப்பில் சேருவதற்க்கு முன்பு ஒரு வருடம் வெளிநாடுகளுக்கு செல்ல இருப்பதாகவும் கூறினார்.

## சூறாவளியினால் 66 ஆயிரம் பேர் இடம் பெயர்வு

மெக்சிக்கோவில் நேற்று முன்தினம் சூறாவளி வீசியதை அடுத்து குயின்டா மாநிலத்திலிருந்து சுமார் 66 ஆயிரம் பேர் தமது வீடு வாசல்களைவிட்டு வெளியேறியுள்ளனர்.

கொன்ரோஸ், கௌதமாலா ஆகிய இடங்களிலும் இந்த சூறாவளி வீசியுள்ளது.

இதனால் பலத்த மழை மண் சரிவு ஏற்பட்ட இடம் உண்டு என அமெரிக்க தேசிய சூறாவளி கண்காணிப்பு நிலையம் அறிவித்துள்ளது.

மேலும் நகரங்களின் பல பகுதிகளில் மின்சார துண்டிப்புகள் நிகழ்ந்துள்ளது எனவும் தெரிய வருகிறது.

## உலகப்போர் குண்டுகள் வெடித்து சிதறிய அதிசயம்

(பெர்லின்)

உலகப் போரின் போது புதையுண்ட 2 குண்டுகள் திடீரென வெடித்து சிதறின. இதனால் 15 மீட்டர் ஆழமுள்ள அளவில் பள்ளம் ஏற்பட்டுவிட்டது. இது எங்கு தெரியுமா ? ஜெர்மனியில் உள்ள முக்கிய விமான தளமான வெஸ்ட்பலியா என்ற இடத்தில்தான். அங்கு விமான தளத்தில் உலகப் போரின் போது வீசப்பட்ட ஏராளமான குண்டுகள் புதையுண்டு போயின. இதன் மேல் பகுதியில் விமான ஓடு தளம் அமைக்கப்பட்டு இருந்துள்ளது.

இந்த விமான தளத்தில் விமானங்கள் ஏற்றம்-இறக்கம் காரணமாக ஏற்பட்ட அழுத்தத்தின் காரணமாகவே வெடித்துள்ளது. குண்டுகள் வெடிக்கும் முன்பாக கூட ஒரு விமானம் இங்கு தரை இறங்கி உள்ளது. நல்ல வேளையாக இந்த விமானம் தப்பியது. விமானம் இறங்கிய சற்று நிமிடங்களில் குண்டு வெடித்ததால் பயணிகள் அனைவரும் உறைந்து போயினர்.

இன்றும் ஆயிரக் கணக்கான உலக போர் குண்டுகள் ஜெர்மன் பூமியில் புதையுண்டு கிடப்பதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. இவை அனைத்தும் அமெரிக்கா மற்றும் பிரிட்டன் நாடு களால் வீசப்பட்டவை ஆகும். இனி இந்த குண்டுகளை கண்டு பிடிக்க புதிய யுக்தி கையுடன் ஜெர்மன் கையாள வேண்டுமாம்.

இங்கு நடைபெற்ற குண்டு வெடிப்பிற்கு சில மணி நேரங்களுக்கு முன்னர்தான் நெதர்லாந்து அரசி பெட்ரிகஸ் இந்த விமான தளத்தில் வந்து இறங்கினாராம்.

## "நான் சரணடையத் தயார்" கி.திமோர் இராணுவத் தலைவர்

மூன்று ஐ.நா.உதவி ஊழியர்களின் படுகொலையில் தொடர்பு இருப்பதாக கிழக்குத் திமோர் சேனைகளின் தலைவரை கைது செய்ய ஜகாட்டா உத்தரவிட்டார்.

"என்னைக் கைது செய்யத் தேவையில்லை" என்னை நீங்கள் ஆண்டவன் சொன்னால் நான் சரணடைவேன்'' என யுறிக்கோ கட்டேர்ஸ் நிருபர்களுக்கு தெரிவித்தார்.

நாட்டின் நிலைமையை கட்டுப்படுத்த வேண்டும் அல்லது வெளிநாட்டு உதவிகளை இழக்க வேண்டும் எனும் நிர்ப்பந்தத்திற்கு தள்ளப்பட்டிருக்கும் ஜனாதிபதி அப்துல் ரகுமான் வாஹிட் கட்டேர்ஸ் கைது செய்யப்படுவார் என்று வெள்ளியன்று தெரிவித்தார்.

மேற்குத் திமோரிலும், ஜகாட்டாவிலும் இம்மாதத்தில் பல கொலைகள் நடந்தன. இவ்விரு இடங்களிலும் தகிகிஸ் குழுக்களை சிதறடிக்க முடிய வில்லை. தனது தேர்தல் காலங்களில் இருந்து 'வாஹிட்ஸ்' ஐக்கிய நாடுகளுடனும் பல வெளிநாட்டு அரசுடனும் தொடர்பு களை வைத்திருந்தார்.



இந்தோனேசியாவின் கிழக்குத் திமோரில் நிலவும் யுத்தநிலை காரணமாக மேற்குத் திமோரில் உள்ள குபாங் நகரில் அகதி முகாம்களில் வாழும் பெண்கள் தண்ணீர் எடுப்பதற்காக வரிசையாக நிற்கும் காட்சி இது. (ஒக்டோபர் 1.2000)





சமாதானத்தின் பெயரால் உரிமை சாகடிக்கப்படக்கூடாது.
உரிமையின் பெயரால் சமாதானம் வாழவைக்கப்பட வேண்டும்.

பசீர் சேகுதாவூத் மட்டக்களப்பு மாவட்ட வேட்பாளர் தேசிய ஐக்கிய முன்னணி

# தொழில்நுட்பவியல் யுகத்துக்கு முக்கியம் கொடுத்து முன்னேறி வரும் ஊடகத்துறை

(நற்பிட்டிமுனை நிருபர்)

21ம்நூற்றாண்டை எதிர்கொள்ளும் ஊடகத்துறை புதிய கல்வி தொழில் நுட்பவியல் யுகத்திற்கு முகம் கொடுத்து முன்னேறிக் கொண்டிருக்கின்றது. இதன் வளர்ச்சிக்கேற்ப ஊடகவியலாளர் தன் திறமையை வளர்த்துக் கொள்ள வேண்டிய பாரிய கடமை முன்னோக்கி வருகின்றது. சிறந்த மொழியாற்றலும் பேசுபவர்களுடைய கருத்தை புரிந்து விளங்கி நடுநிலை தவறாது எழுதுபவனே சத்தியத்துக்கு தலைசாய்ப்பவனாக மாறுகின்றான். மாறாக செய்திகளை திரித்து எழுதுவதும் அதன் மூலம் சமூகத்தில்பிளவுகளை ஏற்படுத்தக் கூடியதாகவும் செய்திகள் அமையக்கூடாதென வலயக் கல்விப் பணிப்பாளர் கலாபூசணம் மருதூர்.ஏ.மஜீத் குறிப்பிட்டார்.

அம்பாறை மாவட்ட தேசிய இளைஞர் சேவை மன்ற ஆதரவில் கல்முனை பிரதேச இளைஞர்கழக அனுசரணையுடன் நற்பிட்டிமுனை அல் அமீன் இளைஞர்கழகத்தால் அண்மையில் அல் அக்ஷா மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற ஊடகவியல் கருத்தரங்கில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றும் போதே இதனை தெரிவித்தார்.

தமிழ்,முஸ்லிம் இளைஞர், யுவதிகள் சுமார் 250பேர் கலந்துகொண்ட இக்கருத்தரங்கிற்கு அல் அமீன் இளைஞர் கழகத் தலைவர் காதர் எம் ஜௌபீக் தலைமை தாங்கினார். இக்கூட்டத்தில் தொடர்ந்து வலயக்கல்விப் பணிப்பாளர் உரையாற்றும்போது ஊடகவியலாளர் மொழிக்கு அடிமையாகி அதனை வளர்த்துக் கொள்ள வேண்டும். ஊடகவியலாளருக்கு போர்த்தப்படும் பொன்னாடை அவனது எழுத்துத்துறைக்கு கிடைத்த மாபெரும் அடையாளமாகும். நல்ல எழுத்தாளன் ஊடகத்துறையில் முத்திரை பதிப்பான். இதன் மூலம் அவன் சம அந்தஸ்தைப் பெறுகின்றான். ஒரு காலத்தில் விலை மதிப்பற்றிருந்த ஊடகவியலாளர் இன்று சமூகத்தில் உயர் மதிப்பை பெறுவதற்கு காரணம் ஊடகத்துறை சகல துறைகளிலும் முன்னேற்றமடைந்து செல்வதாகும் எனவும் குறிப்பிட்டார்.

கௌரவ அதிதியாக கலந்து கொண்ட ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி அம்பாறை மாவட்ட அமைப்பாளர் சட்டத்தரணி யூ.எம்.நிசார் உரையாற்றும் போது பத்திரிகையாளன் சமூதாய வோட்டத்தில் பாரிய பொறுப்பை வகிக்கிறான். ஊடகத்துறைக்கு செய்திகளை அனுப்பும் போது நடுநிலை தவறாதுஎழுத வேண்டும். அதில் உண்மை இருப்பதோடு பொய் கலக்கக் கூடாது. ஊடகத்துறை பலம் பொருந்திய பொக்கிஷமாகும். அபிவிருத்தி கண்டு வரும் இக்காலத்தில் உலகில் நடைபெறும் சமூக அவலங்கள்,அநீதிகள், பாரபட்சங்கள், உரிமை மறுப்புக்கள் இதன் மூலமே வெளிக் கொணரப்படுகின்றன. மனித உரிமை விலை பேசப்படும் சூழ்நிலையில்அவை ஆற்றும்பங் களிப்பு மெச்சத்தக்கதாகும். ஊடகத்துறை இலங்கை போன்ற வளர்முக நாடுகளில் துரித கதியில் முன்னேறி வருகின்றது. அபிவிருத்திஅடைந்த நாடுகளில்25 வருடத்திற்கு மேற்பட்ட முன்னேற்றத்தை அடைந்து விட்டதெனவும் குறிப்பிட்டார்.மாவட்ட இளைஞர் சேவை அதிகாரி எஸ்.எம்.ஏ.காதர் இங்கு உரையாற்றும் போது மனித கருத்துக்கள் ஓரிடமிருந்து இன்னோர் இடத்திற்கு மிக விரைவாகசெல்லுவதற்கு ஊடகத்துறையேகளம் அமைக்கின்றது. இளைஞர்களிடம் மறைந்து கிடக்கும் ஆற்றலை வெளிப்படுத்த முடியாதுதிணறும் நிலையில் இப்படியான கருத் தரங்கும் அதற்கு வழிசமைக்க வேண்டும். இளைஞர்கள் எதிர்காலத்தில் பத்திரிகையாளர்களாக, எழுத்தாளர்களாக, மாற இப்படியான கருத்தரங்குகள் களம் அமைக்க வேண்டும் என்று குறிப்பிட்டார்.

கவிச்சுடர்அன்பு முகைதீன் இங்கு உரையாற்றும் போது மங்கையராய் பிறப்பதற்கு மாதவம் செய்ய வேண்டும் என பாரதி குறிப்பிட்டது போல அதிகளவு யுவதிகள்கலந்து கொள்வதையிட்டு பெருமிதம் அடை கின்றேன். அண்டங்காகத்திற்கும், குயிலுக்ும்வேறுபாடு தெரியாதிருக்கும் இளைய சமூகத்திற்கு இன்றைய விரிவுரையின் மூலம் குயிலின் குரலையும், காகத்தின் குரலையும் வேறுபடுத்திக்காட்ட விரும்புகின்றேன். இங்கிருந்து நீங்கள் செல்லும் போது சிறந்த கவிதை எழுதும் திறன் உள்ளவர்களாக செல்ல வேண்டுமெனவும் குறிப்பிட்டார்.

இக்கருத்தரங்கில் அதிதிகளாக கல்முனை பிரதேச சபை முன்னாள் உறுப்பினரும் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் வரப்பு இணைச் செயலாளருமான ஏ.ஏ.கபூர்சட்டத்தரணி எம்.ஐ.ஏ. அஸீஸ், மாவட்ட இளைஞர் சேவை அதிகாரி எஸ்.எம்.ஏ.காதர் இளைஞர் சேவை அதிகாரி எம்.ரி.ஹாறூன், பத்திரிகையாளர் எஸ்.சிறாஜுதீன், கவிஞர் செல்வி சுல்பிகாசரீப்,அதிபர் எம்.எல். கையூப், கவிஞர் செல்லையா பேரின்பராஜா ஆகியோர்கள் கலந்து சிறப்பித்தனர்.

பத்திரிகையாளர் எஸ். சிறாஜுதீன்,அதிபரும், கவிஞருமான எம்.எல்.ஏ.கையூம் ஆகியோர் பிரதம அதிதியால் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டனர்.

# புலிகளின் வானொலி கேட்கிறது

(மட்டக்களப்பு நிருபர்)

தற்போது மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் விடுதலைப் புலிகளின்வானொலிச் சேவையைக் கேட்கக்கூடியதாக இருப்பதாகத் தெரியவருகிறது.

தினசரி காலை 7 மணிக்கும், இரவு 9 மணிக்கும் இச் சேவையை சிற்றலை வரிசை 41இல் கேட்கக்கூடியதாக இருப்பதாகவும் அச்செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது

## எல்லை கடந்த 52 இலங்கை மீனவர்கள்

கடந்த காலங்களில் கடல் எல்லையை மீறியதன் குற்றச் சாட்டின் பெயரில் இந்தியப் பொலிசாரால் இலங்கை மீனவர்கள் 52பேர் கைதுசெய்யப்பட்டு இருந்தனர். இவர்களை விடுவிப்பதற்காக இந்திய அரசாங்கம் மேலதிக நடவடிக்கை எடுத்து வருகின்றது.

கைது செய்யப்பட்ட மீனவர்கள் கேரளாவில் தடுத்து வைக்கப்பட்டு உள்ளதாகவும் அத்தோடு கைதான் மீனவர்களுக்குச் சொந்தமான 12 வள்ளங்களும் தம்வசம் இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

அமைச்சர் லக்ஷ்மன் ஜயகொடியின் இந்திய விவசாய அமைச்சரின்சந்திப்பின் காரணமாகவே இவ் சுமூகமான சூழலை தோன்றியுள்ளதாகவும் இவ் மீனவர்களை விடுவிக்க மேலதிக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் செய்திகள். கூறுகின்றனர்.

# இளைஞர்களை ஒன்றிணைத்து சிறப்பாக வழிநடத்த வேண்டும்

(கல்முனை மத்திய நிருபர்)

இளைஞர்கள் ஒன்றிணைக்கப்பட்டு சிறந்த முறையில் அவர்கள் சமூகத்தில் வழிநடத்தப்படவும், தலைமைத்துவம்,நட்புறவு, சகோதரத்துவ உணர்வு போன்ற மானசீக உணர்வுகள் தோற்றம் பெறுவதற்கும்இன்றைய காலகட்டத்தில் யுத்தம் மற்றும் சமூக சீர்கேட்டுஅம்சங்கள் போன்றவைகளின் மூலம் இளைஞர்கள் சீரழிந்து கொண்டிருக்கும் தருணத்தில் இளைஞர் சேவை மன்றத்தினூடாக இளைஞர்களை ஒன்றிணைத்து அவர்களை ஒரு கட்டுக் கோப்புக்குள் கொண்டு வர முயற்சித்துவருவது வரவேற்கத்தக்கதே. வடக்குத் தெற்குப்பாலம் இளைஞர் மாநாடு போன்றவற்றின் மூலம் இளைஞர்களுக்கிடையிலான நட்புரிமையை ஏற்படுத்த முயல்வதும் ஓர் ஆரோக்கியமான செயற்பாடே என்றாலும் அதை மறுப்பதற்கில்லை.

இவ்வாறு 22-09-2000 வெள்ளி பி.ப 4.30 மணிக்கு மருதமுனை அல்-மனார் மத்திய கல்லூரியில் நடைபெற்ற கோல்ட் டைமன்ட் இளைஞர் கழகத்தின் வருடாந்த பொதுக்கூட்டத்தில் பிரதம அதிதியாக கலந்து கொண்ட கல்முனை மாவட்ட மேலதிக பதிவாளர் எம்.ஜே. ஜமால் முஹம்மட் தமதுரையில் தெிவித்தார்.

அமைப்பின் அமைப்பாளர் ஜெஸ்மி.எம்.மூஸா தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில்தலைவர் எம்.ஐ.எம். ஜஹாங்கீர், செயலாளர் வலீத், பொருளாளர் ரீ.எம்.றியாஸ், உறுப்பினர் நைறூஸ்ஹான் ஆகியோர் உரையாற்றினர். இதில் விஷேட அதிதியாக கல்முனை இளைஞர் சேவை அதிகாரி எம்.ரீ.எம்.ஹாறூன் கலந்து கொண்டு புதிய நிர்வாகத் தெரிவினைச் செய்தார். 75க்கு மேற்பட்ட இளைஞர் யுவதிகள் கலந்து கொண்டு புதிய அங்கத்துவர்களாக சத்திய பிரமாணம் செய்து கொண்டனர்.

# வருடாந்த உற்சவம்

(நமது நிருபர்)

ஆரையம்பதிஅருள்மிகு ஸ்ரீகந்தசுவாமிஆலயவருடாந்த மகோற்சவவிஞ்ஞாபனம் அக்டோபர்3ம்திகதி செவ்வாய் கிழமைவிசேடபூசைகளுடன்ஆரம்பமாகி மறுநாள் புதன்கிழமை கொடியேற்றத்துடன் தொடர்ந்து திருவிழாக்கள் இடம் பெற்று 13ம் திகதி வெள்ளிக்கிழமை தீர்த்தோற்சவத்துடனும், கொடியிறக்கத்துடனும்மறுநாள் பூங்காவனமும்,திருக்கல்யாண பூசையும் நடைபெற்று15ம்திகதி ஞாயிற்றுக் கிழமை வைரவர் பூசை யுடன் வருடாந்த உற்சவம் இனிதே நிறைவுபெறும்.

இவ் உற்சவகிரியைகள் மகோற்சவ கால குரு மணி பிரம்மஸ்ரீ பொன் குமாரசாமிக் குருக்கள் தலைமையில் நடைபெறும்.

# புலமைப்பரிசில் முடிவுகளில் யாழ் மாவட்டம் வீழ்ச்சி

## கல்வி மான்கள் கவலை

(கொழும்பு)

யாழ்மாவட்ட புலமைப் - பரிசில் பரீட்சைமுடிவுகள் அம்மாவட்டத்தில் ஏற்பட்டுள்ள கல்விவீழ்ச்சியை காட்டியிருப்பதாகவும் அதனை நிவர்த்தி செய்யாவிட்டால் எதிர்காலத்தில் பாரிய கல்வி வீழச்சியை தமிழ் சமுதாயம்எதிர்நோக்க வேண்டியிருக்கும் எனவும் கல்விமான்கள் தெரிவித் துள்ளனர்.தற்போது வடக்கு கிழக்கில் நிலவும் அசாதாரண சூழ்நிலை மக்கள் இடம் பெயர்வு, பாடசாலைகள் சீராகஇயங்காமை. இலவசபாடப் புத்தகங்கள் ஒழுங்காக வந்து சேராமைபோன்றவை எதிர்காலத்தில்சீர் செய்யப்படாமல் போனால் தமிழ் மாணவர்களின் கல்வி நிலையில் பாரிய வீழ்ச்சி ஏற்படும்எனஅவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.


**1வது பிறந்த நாள் வாழ்த்து**

**(03.10.2000)**



ஹரிபிரசாத்(சஞ்சு)

மாமாங்கம் 1ம் குறுக்கைச் சேர்ந்த உதய சூரியன் உஷா தம்பதிகளின் செல்வப் புதல்வன் ஹரிபிரசாத் (சஞ்சு) இன்று தனது முதலாவது பிறந்தநாளை வெகு விமர்சையாக தனது இல்லத்தில் கொண் டாடுகிறார். இவரை சவூதியில் இருக்கும் அப்பா, அம்மா, அக்கா தனுஜா, அப்பம்மா, அம்மம்மாமார், அம்மப்பா, சித்தப்பா, சித்தி, மாமா, மாமி, பெரியம்மா, பெரியப்பா, அக்காமார், அண்ணாமார் மற்றும் உற்றார் உறவினர் பல்கலையும் பெற்று பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகின்றனர்.

Ady

**3வது பிறந்ததின வாழ்த்து**



கௌசிகா

வந்தாறுமூலையைச் சேர்ந்த வேலுப்பிள்ளை சுமலாதேவி தம்பதிகளின் செல்வப் புதல்வி கௌசிகா தனது 3வது பிறந்த தினத்தை 02-10-2000இல் தனது இல்லத்தில் வெகு விமர்சையாகத் தனது அன்புச் சகோதரர்களோடு கொண்டாடினார். அவரைஅம்மப்பா தர்மலிங்கம் அண்ணாமார்களாகிய கௌசிகன், கவிதாஸ், பெரியப்பா ஜேர்ன்சன், பெரியம்மா சிவக்கொழுந்து, மாமாமார்கள் மோகன், தில்லைநாதன் மாமா குடும்பம், லோகேந்திரன், ரொசான், சுரேஸ் மாமா, சந்திரசேகர் மாமா, மாமிமார் டெயிசி, லெவின், சின்னம்மா தமிழ்ச்செல்வி மற்றும் உறவினர்கள் கித்தாண்டி முருகன் அருள் பெற்று சீரும் சிறப்போடும் பல்லாண்டு காலம் வாழ வாழ்த்தினார்கள்.

தகவல்:-

சந்திரசேகர்
72/5 விஜயபுரம்,
மட்டக்களப்பு

Adv



**தமிழீழ விடுதலை இயக்கம் (ரெலோ) மட்டக்களப்பு மாவட்டம்**

* வடக்கு கிழக்கு இணைந்த தாயகத்தை வலியுறுத்த * அவசரகால சட்ட நீடிப்புக்கு எதிராக வாக்களிக்க
* "புலி" களுடன் பேசி பொது இணக்கத்துக்கு வருமாறு அரசை வலியுறுத்த

**வெளிச்சவீட்டு சின்னத்திற்கு வாக்களியுங்கள் !**



4 5

பிரசன்னா - 4



சாந்தன் - 5

# பிறந்த திகதி தரும் யோகம்.

## ஜோதிடம் ஏப்ரல் - 04

ஏப்ரல் மாதம் 4 - 13 - 22ம் தேதிகளில் பிறந்தவரின் பலன்கள் :-

எண் 4. அதன் அதிபதி ராகு :-

ஏப்ரல் 4 இல் பிறந்தவர்கள் குருவின் ஆதிக்கத்தையும் 13ம் திகதி பிறந்தவர்கள் குரு செவ்வாயின் ஆதிக்கத்தையும் 22ம் திகதியில் பிறந்தவர்கள் செவ்வாயின் ஆதிக்கத்தையும் உடையவர்கள்.

எப்பொழுதும் வெற்றியும், தோல்வியும் இணைந்தே பெறுவீர்கள். அதாவது ஏற்ற இறக்கமுள்ள வாழ்க்கையாகவே அமையும். உங்கள் வாழ்க்கையில் விதியே முதன்மை பெற்று செயலாற்றும் உத்தியோகத்திலோ, தொழிலிலோ பல மாற்றங்களைச் செய்வீர்கள். தொழில் நிலையில் சந்தோஷம் குறைவாகவே இருக்கும். நண்பர்களும் உங்களுக்கு உதவி செய்பவர்களாக அமையாது. நீங்களே அவர்களுக்கு உதவி செய்யும் நிலை ஏற்படும். சடங்கு, சாஸ்திரங்களில் நம்பிக்கை குறைவு. உங்களுக்கென்று ஒரு கொள்கையை வகுத்துக் கொள்வீர்கள் இடையூறுகளைச் சந்திக்கும் நிலையும் ஏற்படும். மறைமுக எதிர்ப்பும் இருக்கும்.

எதிலும், புதுமையை விரும்புவீர்கள். பல புதிய கண்டுபிடிப்புக்களை உருவாக்கும் திறமைசாலிகள். வானொலி, தொலைகாட்சி, மின்சார சாதனங்களில் பல புதியன வற்றைக் கண்டுபிடிக்கும் திறமை உடையவர்கள். வழக்கு, வம்புகளும் ஏற்படும் எதையும் ஆராய்ந்து செயல்படுவது நன்மை தரும். சிறந்த புத்தகப்பிரியர்கள். பல நூல்களைப் படித்து அறிவாற்றல் பெறுவீர்கள். முயற்சியால் பொருளாதாரநிலை உயர்வடையும்.

மற்றவர்களுடன் இணைந்து பணியாற்றுவதில் கெட்டிக்காரர்களே. உங்களது கொள்கையை மற்றவர்களிடம் புகுத்துவதில் வெற்றியும் பெறுவீர்கள்.

வருங்காலத்தை நினைத்தே அதிகம் சிந்திப்பவர்கள். பணியாற்றினாலும் சொந்தத் தொழில் புரிந்தாலும் இறுதிக் காலத்தில் அவைகளில் இருந்து தானாகவே முன்வந்து ஓய்வு பெறும் எண்ணம் கொண்டவர்கள்.

உழைப்பே உயர்வு தரும் என்ற நம்பிக்கை உடையவர்கள். அதிக உழைப்பால் உடல் அசதி பெறும் யாராலும் என்ன வியாதி என்று கண்டு பிடிக்க முடியாத நிலையும் ஏற்படும். அதற்கு 'உணவே மருந்தாகக் கொண்டால்' அந்த வியாதிகளில் இருந்து விடுதலை பெறலாம்.

1 - 4 - 9 - 10 - 13 - 18 - 19 - 22 - 27 - 28ம் தேதிகள் எந்த ஆண்டு, எந்த மாதமானலும் அதிர்ஷ்டமுடையவைகளே.

உங்களது வாழ்க்கையில் 4 - 8 - 13 - 17 - 22 - 26 - 31 - 35 - 40 - 44 - 49 - 53 - 58 - 62 - 67 - 71 - 76 - 80ம் வயதுகளில் மறக்க முடியாத நிகழ்ச்சிகள் நடைபெறும்.

4 - 8 - 13 - 22 - 26 - 31ம் தேதிகளில் பிறந்தவர்களின் உதவியும் நட்பும் எப்பொழுதும் கிடைக்கும். கணவன், மனைவி பிறந்த திகதியும் இதே எண்ணில் அமையுமானால் இல்லறம் நல்லறம் என்ற நிலையே ஏற்படும்.

நிறம் :- வெளிர் நீலம், வெளிர் நிறமுடைய ஆடைகள் மனச் சாந்தியையும் அதிர்ஷ்டத்தையும் தரும்.

நவரெத்தினம் :- கோமேதகம், தேன்நிறத்திலே உயர் ஜாதிக் கோமேதகம் இருக்கும். இதை அணிந்து கொண்டால் நோய்வரு முன் காக்கும், தோல்வியாதியான படை, சொறி, சிரங்கு, வெள்ளைப்புள்ளிகள் இவைகள் மறையும் அதனால் மன அமைதி பெறலாம்

# சுவாமி விபுலானந்தர் நினைவு

## பொது அறிவுப் போட்டி பரிசளிப்பு விழா!

- (மைக்கல்) -

மட்டக்களப்பு சிவானந்தியன் பட்டதாரிகள் ஒன்றியத்தினால் வருடாந்தம் நடாத்தப்படும் சுவாமி விபுலானந்தர் நினைவுப் பொது அறிவுப் போட்டி பரிசளிப்பு விழா நிகழ்வுகள் கடந்த செப்டெம்பர் 30ம் திகதி சனிக்கிழமை மாலை 3.00 மணிக்கு மட்/சிவானந்தா வித்தியாலயத்தில் நடைபெற்றது.

சிவானந்தியன் பட்டதாரிகள் ஒன்றியச் செயலாளர் ரி.சதானந்தனின் வரவேற்புரையுடன் ஆரம்பமாகிய இந்நிகழ்வில் மட்/இராமகிருஷ்ணமிஷன் தலைவர் சுவாமி ஜீவானந்த மகராஜ் ஆசியுரை வழங்க பிரதம்விருந்தினராக கலந்து கொண்ட மட்/மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வி.சண்முகம் சிறப்புரையாற்றினார்.

எஸ்.சிவகாந்தன் தலைமையில் நடைபெற்ற இவ் விழாவிற்கு முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பொன் செல்வராஜா, காத்தான்குடி செலான்வங்கி முகாமையாளர் சற்குணராஜா, மட்டக்களப்பு மக்கள் வங்கி பிராந்திய முகாமையாளர் சி.சீவரெட்ணம் ஆகியோர் சிறப்பு அதிதிகளாக கலந்து கொண்டனர்.

அன்றைய தினம் காலை 8.30 மணியளவில் நடைபெற்ற பாடசாலைகளுக் கிடையிலான பொது அறிவுப் போட்டியில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கான பரிசில்களும் வழங்கப்பட்டன.

இதில் க.பொ.த உயர்தர பிரிவில் மட்/வின்சன்ட் மகளிர் தேசிய பாடசாலையைச் சேர்ந்த சுகன்யா செபரெட்ணம். தர்ஷினி, மயூர கிரிநாதன், பிரணித்தா அரசரெட்ணம், ஷோசினி அரசலிங்கம் ஆகியோரைக் கொண்ட குழு முதலாம் இடத்தையும்.

க.பொ.த.சாதார்ண பிரிவில் இதே பாடசாலையைச் சேர்ந்த யாழினி கனகரெட்ணம் ஹம்சப்பிரியா யோகேந்திரன், கீர்த்தனா குகமூர்த்தி, சங்கீதா ஜெயானந்தம் ஆகியோரைக் கொண்ட குழு இரண்டாம் இடத்தினையும் பெற்றுக் கொண்டது.

இப்போட்டியின் சிறந்த மாணவியாகவும், இப்போட்டித் தொடர்களின் சிறந்த மாணவியாகவும் மட்/வின்சன்ட மகளிர் தேசிய பாடசாலையைச் சேர்ந்த சுகன்யா செபரெட்ணம் சிறப்புப் பரிசினைப் பெற்றுக் கொண்டது குறிப்பிடத்தக்கது.

# படப்பிடிப்பாளர்கள் ஒன்றுபட வேண்டும்!

## சங்க வைபவத்தில் கெயார் நிருவன தலைவர் உரை

- ( சி.நாகேந்திரன்) -

படப்பிடிப்பு தொழிலானது ஒரு உன்னத தொழிலும் மக்களுக்கு சேவை செய்யும் தொழிலுமாகும். எனவே படப்பிடிப்பாளர்கள் ஒன்றுபட்டு இச் சேவையினை செய்ய வேண்டும் என மட்/கோப்இன் மண்டபத்தில் நடைபெற்ற படப்பிடிப்பாளர் சங்க ஐந்தாண்டு நிறைவுக் கூட்டமும் படப்பிடிப்பாளருக்கான அடையாள அட்டை வழங்கும் வைபவத்தில் கலந்து கொண்ட கெயார் நிறுவன தலைவர் ஜெகநாதன் கூறினார்.

அவர் மேலும் கூறுகையில் நாம் எங்கு வேண்டுமானாலும் வாழலாம் அது காடாக இருக்கலாம் நாடாக இருக்கலாம் ஆனால் நாம் அங்குள்ள மக்களுக்கு நல்லவராக இருக்க வேண்டும் என தெரிவித்தார்.

இக் கூட்டத்திற்கு தலைமைதாங்கிய சங்கத் தலைவர் பூ.ஜெயந்தன் பேசுகையில் சங்கத்தின் பதவி என்பது சேவை மனப்பான்மை உடையது அதை திறம்பட நடத்த வேண்டும் என கூறினார்.

இக் கூட்டத்திற்கு சிறப்புவிருந்தினராக வருகைதந்திருந்த ஐ.தே.க. வேட்பாளர் ராஜன் சத்தியமூர்த்தி கூறுகையில் சங்கம் இன்று பலம் வாய்ந்த சங்கமாய் இருப்பதை கண்டு தான் சந்தோசம் அடைவதாக கூறினார்.

இந் நிகழ்வின்போது சங்கத்திற்காக சேவை செய்த பவான், ஜெகதீஸ்வரன ஆகியோர் பொன்னாடை போர்த்தி கௌவுரவிற்கப்பட்டனர்.

முடிவில் இக் கூட்டத்திற்கான புதிய அங்கத்தவர் தேர்வு கூட்டம் இடம் பெற்றது.

# வடகிழக்கு மாகாண கலாசார ஒன்றியம்

23 - 09 - 2000ம் அன்று திருமலை கலவி, கலாசார விளையாட்டுத்துறை அமைச்சில் நடைபெற்ற கலந்துரையாடலில் வடகிழக்கு மாகாண கலாசார உத்தியோகத்தர்களினால் கலாசார ஒன்றியம் ஒன்று உருவாக்கப்பட்டது. அதில் தலைவராக :-

கி.மலர்ச்செல்வன், செயலாளராக க.அன்பழகன் உபதலைவர்களாக எஸ்.பண்டார ஏ.எல்.தௌபீக்கும், உபசெயலாளர்களாக திரு.கே.என்.தயசீலி, ஏ. எச்.அம்ஜத் பொருளாளர் பொ.சந்திரகுமாரியும் தெரிவு செய்யப்பட்டதுடன். இவ் ஒன்றியத்தின் ஆலோசகராக கலாசார அலுவல்கள் உதவிப் பணிப்பாளர் எஸ்.எதிர்மன்னசிங்கம் ஒன்றியத்தின் உறுப்பினர்களாக (அங்கத்தவர் கள்) புஸ்பராணி, ஙஸ்.விஜிதா, கே.சுமதிபால, பிரபாகரன், சோமசுந்தரம், மு.சுதாகரன், எஸ். சிவகுமார், பீர்முகமட், திரிலிங்கநாதன், குணபாலன், ஜெயவதனி ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

இவ் ஒன்றியம் தமிழ், சிங்கள, முஸ்லிம் சகோதரர்களின் ஒன்றிணைப்பில் வேறுபாடுகள் அற்ற ஒரு பொதுக் கலாசார முறையை எமது பிரதேசங்களில் ஏற்படுத்துவதுடன் பின்தங்கிய மந்த நிலையில் செயற்பட்டு வரும் கலாசார விழுமிய, பண்பாட்டு, பாரம்பரியங்களை வெளிக்கொண்டு வருதலும் அவற்றை பேணி வளர்த்தெடுத்தலும் ஆகும். அத்துடன் கலாசார உத்தியோகத்தர்களின் பிரச்சினைகளை தீர்த்து வைத்து அவர்களின் சேவைக்கு ஊக்கமளிப்பதும் இம் மன்றச் செயற்பாடுகளின் ஒன்றாகும்.

# விவசாய பண்ணை உபகரணங்கள் இயந்திரங்கள் பற்றிய பொருட்காட்சி!

- (மைக்கல்) -

அம்பாறை ஹாடி உயர் தொழில் நுட்பக்கல்லூரியின் விவசாய மாணவர் ஒன்றியம் ஒக்டோபர் 23ம் திகதி தொடக்கம் ஒக்டோபர் 25ம் திகதி வரை விவசாய பண்ணை உபகரண பண்ணை இயந்திரங்கள் பற்றிய பொருட்காட்சியினை நடாத்தி பண்ணை நிலையினை மேம்படுத்த தீர்மானித்துள்ளது.

பண்ணை உபகரணங்கள் பற்றிய தெளிவான விளக்கத்தினை பாடசாலை மாணவர்களுக்கு வழங்கல். பண்ணை இயந்திர உபகரணங்கள் பற்றிய தொழில் நுட்பங்களை தெளிவுபடுத்தல், பண்ணை உபகரணங்களை தெளிவாக அடையாளம் காணல், விற்பனை நிலையங்கள் மூலம் புதிய விவசாய உபகரணங்களை அறிமுகப்படுத்துதல் போன்ற நோக்கங்களை குறிக்கோளாகக் கொண்டு நடாத்தப்படும், இப் பொருட்காட்சியை கண்டுகளிக்க மாணவர்களுக்கு 5/- ,வும் ஏனையோருக்கு 10/- ரூபாவும் அனுமதிக்கட்டணங்கள் உண்டு.


அழகுசுப்பிரமணியம் சத்தியநாதன்
அரசியல் விடிவானில் ஓர் இளஞ்சூரியன்





தமிழர் விடுதலைக் கூட்டணி
மட்டக்களப்பு மாவட்டம்






ஹிஸ்புல்லாஹ்வுடன் கை கோருங்கள். அவன் என்றுமே கைவிட மாட்டான்.
பொறுமையுடன் காத்திருங்கள். அவன் மட்டக்களப்பு மாவட்டத்தை துரித அபிவிருத்தி செய்வான்
எம். எல். ஏ. எம். ஹிஸ்புல்லாஹ் வை ஆதரிப்போம்.

எம். எல். ஏ. எம் ஹிஸ்புல்லாஹ் தேசிய ஐக்கிய முன்னணி

# மீண்டும் 90ம் ஆண்டுக்கு தமிழ் மக்கள்

- அகத்தியன் -

கடமை நேரத்தில் தேர்தல் பிரசாரத்தில் சமூர்த்தி உத்தியோகத்தர்கள் ஈடுபடுவது குற்றம் என மட்டக்களப்பு மாவட்ட சமூர்த்தி முகாமையாளர் பகிரங்க மாகவே ஊடகங்கள் மூலமாக அறிவித்துள்ளார்.

ஆனால் மட்டக்களப்பு நகர் பகுதியில் உள்ள பிரதேச செயலகம் ஒன்றில் கடந்த செவ்வாய்கிழமை சமூர்த்தி உத்தியோகத்தர்கள் மட்டக்களப் பில் போட்டியிடும் கட்சியொன் றிக்கு பகிரங்கமாகவே ஆதரவு தெரிவித்து கூட்டத்தை நடாத்தி யுள்ளனர்.

"உனக்கில்லை உப தேசம் ஊருக்கு" என்ற மாதிரியாக சமூர்த்தி உத்தியோகத்தர்கள் இவ்வாறு பகிரங்கமாக கடமை நேரத்தில் அரசாங்க காரியால யத்தில் ஒரு கட்சியின் சின்னத்தை காண்பித்து தமது ஆதரவை தெரிவித்துள்ளனர். இப் பிரசாரம் நடந்து சில தினங்களின் பின்பே மட்டக்களப்பு மாவட்ட சமூர்த்தி ஆணையாளர் பகிரங்கமாக கடமை நேரத்தில் சமூர்த்தி உத்தியோகத்தர்கள் தேர்தல் பிரசாரங்களில் ஈடுபட வேண்டாம் என கட்டளை பிறப்பித்துள்ளார்.

மட்டக்களப்பில் உள்ள பிரதேச செயலகம் ஒன்றில் சமூர்த்தி உத்தியோகத்தர்கள் இவ்வாறு பிரசார நடவடிக்கை செய்தமையை அறிந்த தமிழ்கட்சி யொன்றில் போட்டியிடும் வேட் பாளர் சம்பந்தப்பட்ட பிரதேச செயலாளருக்கும், மட்டக்களப்பு மாவட்ட சமூர்த்தி உத்தியோ கத்தர்களுக்கான பொறுப்பு வாய்ந்த ஒரு அதிகாரியிடமும் தமது ஆட்சேபனையை கூறிய துடன் தமது கட்சிக்கும் சம்பந்தப் பட்ட பிரதேச செயலகத்தில் தேர்தல் பிரசாரம் நடத்த அனுமதி தாருங்கள் என தொலைபேசி மூலம் கேட்டுள்ளார்.

இதனை கேட்ட பிரதேச செயலாளர் என்ன செய்வது என்றே தெரியாமல் முணுமுணுத் தராம்.

மட்டக்களப்பு மாவட் டத்தில் தேர்தல் பிரசார நடவடிக் கையில் இம்முறை மேடைப் பேச்சுகள் இடம் பெறுவது மிகவும்



குறைவாகவே காணப்படுகிறது. வேட்பாளர்களும், ஆதர வாளர்களும் வீடுவீடாகச் சென்ற பிரசார வேலைகளில் ஈடுபடுவ துடன் சிலர் ஒலிபெருக்கி பொருத்திய வாகனங்களில் தமது ஆதரவைத் தேடியும் ஏனைய கட்சியை சாடும் நடவடிக்கை களில் ஈடுபட்டுள்ளனர்.

இந்திய சினிமாப் படங்களுக்கு சினிமா நடிகர் போஸ் கொடுப்பது போலவும் சில வேட்பாளர்கள் "போஸ்" கொடுக் கும் வர்ண சுவரொட்டிகளும் மட்டக்களப்பை அசுத்தப்படுத்தி யுள்ளன.

கடந்த ஜனாதிபத்தித் தேர்தல் பிரசாரங்களின்போது தமிழ் முஸ்லிம் மக்களிடம் இனவாதம் பேசிய தேசிய ஐக்கிய முன்னணித் தலைவர்கள் இத் தேர்தலில் தமிழ் மக்களின் கணிசமான வாக்குச்சீட்டை வலைவீச எத்தனித்துள்ளனர்.

இதற்கு துணைபோகும் ஒருவராக முதலைக்குடாவைச் சேர்ந்த அகிலேஸ்வரனையும் தமது தேர்தல் பிரசாத்தில் முக்கிய ஆயுதமாக பயன்படுத்து கின்றார்கள்.

மட்டக்களப்பு மாவட்ட மக்கள் தேர்தலைப் பற்றி பெரிதாக அலட்டாத போதும் போட்டியிடும் வேட்பாளர்கள் ஒருவர் இன்னொருவரின் "பல வீனங்களை" சுட்டிக்காட்டி தமது ஆதரவை பெருக்க முயலு கின்றனர்.

சமூர்த்தி முத்திரை காகவும், கிறிக்கட்மட்டைக் காகவும், அற்ப தொழிலுக்காகவும் ஆலயத்திற்கு ஸ்பிக்கர் கேட்டும் தமிழ் மக்கள் வாக்களிப்பாராகின் 'நமது கண்ணை நமது கையால் குத்தும் நிலை' நிச்சயம் மீண்டும் தமிழ் மக்களுக்குவரும்.

நிதானமாக சிந்தித்து நடக்கப்போகும் பொதுத் தேர்தலில் தமிழ் மக்கள் ஒற்றுமையாக வாக்களிக்காத பட்சத்தில் மீண்டும் ஒரு 90ம் ஆண்டு நிலைதான் தமிழ் மக்களுக்குவரும்.

## - தேவை -

| | |
|---|---|
| பெயர் :- | இராசதுரை |
| அஞ்சல் :- | மட்டக்களப்பு மாவட்டம் |
| நிரந்தர முகவரி :- | அவசியமில்லை |
| வயது :- | 18 மேல் |
| கல்வித் தகமை :- | அவசியமில்லை |
| விசேட தகமை :- | கள்ளக்கையெழுத்து இடக் கூடியவராக இருத்தல் |
| நிபந்தனை :- | தகப்பனின் பெயர் "செல்லையா" வாக கட்டாயம் இருத்தல் வேண்டும் |
| சன்மானம் :- | தகுந்த சன்மானம் வழங்கப்படும் |
| விண்ணபிப்பிக்க வேண்டிய இறுதி திகதி :- | இம் மாதம் 4ம் திகதி வரை |

- அரியரன் -

## தேர்தலே நீ வா !

ஓ...............
தேர்தலே - நீ
ஐந்தாண்டுக்கு ஒருமுறை
வருவதை விட
ஐந்து மாதத்திற்கு
ஒரு முறை வா!

எங்கள் தேவை பற்றி
வேட்பாளர்
வீர வசனம் பேசுவதை
கேட்கும் போது
"அட" தமிழனுக்கு
குரல் கொடுக்க இத்தனைபேரா?:
என்மனம் அமைதி அடைகிறது!

சாயம் பூசிய
வார்த்தைகளாய்
இருந்தாலும் - அவை
சத்திய வார்த்தைகள்
போலல்லவா தெரிகின்றன?

தேர்தல் வந்தால் தான்
இந்த வார்த்தையை
கேட்க முடியும்
தேர்தலே - நீ வா

பாதிக்கப்பட்ட
எங்களுக்கு
பாசம் கொள்ள
ஆயிரம் பேர் வருவர்
தேர்தலே - நீ வா

நீ வந்தால் தானே
எத்தனை
புன்னகை பூத்த முகம்
கும்பிட்டகை
அன்பு வார்த்தையையும்
கேட்க முடியும்

நீ வரவில்லை
என்றால்
இத்தனையும் எப்படி
அறிவோம்
எனவே
தேர்தலே - நீ வா !

"சூரியக்கவி"
சி.நாகேந்திரன்
ஆரையம்பதி - 03

## நெஞ்சில் கத்தியால் தேர்தல் சின்னம் வரைந்தார்.

ரவீந்திரன்

கல்லாற்றில் தேர்தல் நடவடிக்கைகள் சுறுசுறுப்பாக நடைபெற்று வருகின்றன. வீட்டுக்கு வீடு குழுக்களாகச் சென்று ஆதரவு திரட்டுவதில் மும்முரமாக ஈடுபட்டு வருகின்றனர். சிலருக்கு கசப்பான அனுபவங்களும் ஏற்பட்டுள்ளன.

அந்த வேளை ஒருவர் கத்தியால் தனது மார்பில் தேர்தல் சின்னம் ஒன்றை வரைந்து சிகிச்சைபெற்ற சம்பவம் ஒன்றும் இடம் பெற்றுள்ளது.

பேரினவாத கட்சி வேட்பாளர் ஒருவர் இளைஞர், யுவதிகளிடம் வேலைவாய்ப்பு விண்ணப்பங்களை கோரி கோவை செய்வதாகவும் தெரிய வருகின்றது இங்கு இதுவரை எவ்வித தேர்தல் அசம்பாவிதங்களும் இடம்பெற வில்லை வீதிகளின் பரவலாக எல்லா தேர்தல் சின்னங்களும் வரையப்பட்டுள்ளன. இங்கு வேலை வாய்ப்பே முக்கிய பிரச்சாரமாக காணப்படுகிறது.

# திருமதி அஷ்ரப் ஒரு லட்சத்திற்கும் அதிகமான வாக்குகளைப் பெறுவார்

(அட்டாளைச்சேனை நிருபர்)

கொழும்பிலிருந்து பாராளுமன் றத்திற்கு செல்ல வேண்டுமானால் 135எனும் இலக்கத்தை கொண்ட பஸ்சைத் தெரிவு செய்ய வேண்டும். அதே போல் எதிர்வரும் 14ஆம் திகதி திகாமடுல்ல மாவட்டத்திலிருந்து 1,3,5ஆகிய இலக்கங்களைத் தெரிவு செய்து பாராளுமன்றத் திற்கு மூன்று பிரதிநிதிகளை அனுப்பி வைக்க வேண்டும். இதில் முதலாம் இலக்கம் மறைந்த அமைச்சர் அவர்களின் திருமதி, மூன்றாம் இலக்கம் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் அதாவுல்லா, ஐந்தாம் இலக்கம் என்னுடையது என்று சமூகசேவை பிரதியமைச்சரும், முன்னாள் பாராளுமன்ற உறுப்பி னருமான யூ.எல்.எம்.முகைதீன் அட்டாளைச்சேனையில் எம்.ஏ.சீ. சதாத் தலைமையில் நிகழ்ந்த தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கூறினார்.

இக்கூட்டத்திற்கு முன் னாள்பாராளுமன்ற உறுப்பினர் அதாவுல்லா, தென் கிழக்குப் பல்கலைக்கழக பதிவாளர் பளீல், முன்னாள் அட்டாளைச்சேனை உதவித்தவிசாளர் எம்.எஸ். உதுமாலெவ்வை, அக்கரைப்பற்று மத்திய குழுச் செயலாளர் யூ.எல்.உவைஸ் மற்றும் பல முக்கிய பிரமுகர்களும் கலந்து கொண்டார்கள்.

யூ.எல்.முகைதீன் தொடர்ந்து உரையாற்றுகையில், 1994ஆம் ஆண்டு முஸ்லீம் காங்கிரசிற்கு 64 ஆயிரம் வாக் குகளை முஸ்லிம் மக்கள் அளித்து தலைவர் அவர்களைத் தெரிவு செய்வதோடு இதர பாராளுமன்ற உறுப்பினர்களையும் தெரிவு செய்தனர். தற்போது தேசிய ஐக்கிய முன்னணியில் போட்டி 'யிட்டு மூன்று ஆசனங்களைப் பெறவேண்டும் என கனவு கண்டு கொண்டிருந்த தலைவரின் கனவு நனவாகவும் அவர்களின் ஆத்மா சாந்தி யடைவும் திகாடுமல்ல மாவட்டத்தி லிருந்து பொது மக்களாகிய நீங்கள் மூன்று பிரதிநிதிகளைத் தெரிவு செய்ய வேண்டும்எனக் கேட்டுக் கொண்டதோடு திருமதி அஸ்ரப் அவர்களுக்கு நிச்சயமாக ஒரு லட்சத்திற்கும்அதிகமான வாக் குகளை கிடைக்க இருக்கின்றது என மக்கள் வெள்ளத்திற்கு மத்தியில் ஆணித்தரமாக கூறினார்.

அதேவேளை அன்றைய தினம் மஃரிப் தொழுகையின் ஒரு சில நிமிடங்களுக்கு முன் மறைந்த அமைச்சர் அவர்களின் புதல்வர் அட்டாளைச்சேனை 10இல் உள்ள மஸ்ஜிதுல் பலாஹ் பள்ளி வாசலுக்குச் சென்று அப்பகுதி மக்களைச் சந்தித்து தந்தையின் மறைவினையொட்டி பிரார்த்திக்குமாறு கேட்டுக் கொண்டதுடன் பொது மக்களைக் கட்டித் தழுவினார். அமைச்சரின் புதல்வர் தேர்தல் பிரசாரக் கூட்டம் நடைபெறும் இடத்தினைப் பார்வையிட்டு சென்றதோடு அனேகமான இடங்களுக்குச் சென்று பொதுமக்களைச் சந்தித்துச் சென்றார்.

## இந்நாட்டுக்கு இப்போதைய சூழலில் தேர்தல் தேவைதானா?

இலங்கையின் 11வது பாராளுமன்றத்திற்கு எதிர்வரும் ஒக்டோபர் 10ம் திகதி வடக்கு - கிழக்கு (போர் உக்கிரமாக நடந்து கொண்டிருக்கும் போதும்) உட்படத் தேர்தல் நடைபெறச் சகல நடவடிக்கைகளும் மும்முர மாகப் பெரும் முனைப்புடன் எடுக்கப்பட்டு வருகின்றன.

தேர்தல் பிரசாரம் சூடுபிடித்த நிலையில் பிரசார மேடையில் பல வாக்குறுதிகளும் அள்ளி வீசப்படுகின்றன.

மட்டக்களப்பு மாவட்டத் திலும் நான்குபேரும், போனஸாக ஒருவருமாக ஐந்து பேர் பாராளுமன்றப் பிரதிநிதி யாகத் தெரிவாக உள்ளனர். இதற்காக பல கட்சிகளையும் சேர்ந்த 168 பேர் போட்டியிட்டுத் தேர்தல் களத்தில் குதித்துள்ளனர்.

இப்படியான ஒரு வேளை யில் இந்தத் தேர்தல் எமது நாட்டுக்கு யுத்தச் சூழலில் பல்குழல் பீரங்கிகளும், விமானங் களும் நாடே அதிரும்படி குண்டுகளைப் பொழிந்து கொண்டிருக்கும் வேளையிலும் பல பிரேதங்கள் நாட்டின் பல பகுதிகளுக்கும் வந்து கொண்டி ருக்கும் நிலையிலும் தேவை தானா? சொல்லுங்கள்!

இதில் யார் யார் வெற்றிபெறுவார்கள்? இதற்கான உங்களது முடிவை எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 05ம் திகதிக்கு முன்னர் தபாலட்டையில் எழுதி அமைப்பாளர், மட்டக்களப்பு, மாவட்ட வரியிறுப்பாளர், மகா சங்கம்,15 புகையிரத நிலைய குறுக்கு வீதி, மட்டக்களப்பு என்ற விலாசத்திற்கு அனுப்பி வையுங் கள் என மட்/மாவட்ட வரியிறுப் பாளர் மகாசங்கம் அறிவித் துள்ளது.



# விளையாட்டுச் செய்திகள்

## ஒலிம்பிக் எப்படி உதயமானது?

அவுஸ்திரேலியாவின் தலை நகரானசிட்னியில் இடம் பெற்ற ஒலிம்பிக் போட்டிகள் யாவும் முடிவடைந்து விட்டன. இந்த இறுதி வேளையில் ஒலிம்பிக் கின் வரலாறு பற்றி சிறிது பார்க்கலாம்.

இன்று உலகளாவிய மட்டத்தில் மிகச் சிறந்த விளையாட்டுபோற்றத்தக்க ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டியேஆகும். இவ்விளையாட்டு நான்கு ஆண்டு களுக்குஒரு முறை யே சர்வதேச மட்டத்தில் விளையாடப்பட்டுக் கொண்டு வருகிறது. ஒலிம்பிக் விளையாட்டு பற்றிய பூர்விக வரலாற்றினை நோக்குவோமாயின்:-


இவ்விளையாட்டானது எமது பண்டைக்கால கிரேக்கர்கள் கொண்டாடிய தேசிய விழா என்றே கூறத்தகும். இவ்விழாவினை கிரேக்கர் கிரீஸ்நாட்டில் ஒலிம்பியா எனும் சமவெளியில் ஜீஸ் எனும் தம்முடைய தேவதையினை மகிழ்வித்தல்பொருட்டு கொண்டாடிய வழிபாடே இவ் ஒலிம்பிக் விளையாட்டாகும். மற்றும் கிரேக்கர் ஒலிம்பியா எனும் சமவெளியில் கொண்டாடிய மையினால் அது கால ஓட்டத்தில் ஒலிம்பிக் விளையாட்டுன உருக்கொண ரலாயிற்று மேலும் பண்டையகிரேக்கர்இவ் விழா வினைநான்கு ஆண்டுகளுக்கு ஒரு முறையே நடாத்தி வந்தனர். கி.மு 8th நூற்றாண்டு முதல் நடைபெறு வந்த இவ்விழாவை ரோமாபுரி மன்னர்கி.பி394இல் செய்யலாகாது என தடை உத்தரவு பிறப்பித்தார். இதன் நிமித்தம் இவ் விளையாட்டு விழா கி.பி.1500ம் ஆண்டு வரை நடைபெறாமல் இருந்தது.

மற்றும்பண்டைய கிரேக்கர் சிருஷ்டித்த இந்த ஒலிம்பிக் விளையாட்டு விழா மீண்டும் 1896ம் ஆண்டு புத்துணர்வு ஊட்ட தக்கதாக ஏதென்சில் முதன் முதல் நடைபெறுகிறது. மேலும் ஒலிம்பிக் விளையாட்டின் தந்தை என யாராலும் போற்றத்தக்கவர் பெர்டிகோபார்டின் என்பவரேயாவார். 1896ம் ஆண்டு மீண்டும் உதயமாகிய ஒலிம்பிக் விழாவில் 13 நாடுகளைச் சேர்ந்த 311 விளையாட்டு வீராங்கனைகள் பங்கு பற்றினர். இவ் ஆண்டு நடைபெற்ற ஒலிம்பிக் போட்டிக்கு 475 ஆயிரம்டொலர் செலவாகியது.

1900ம் ஆண்டிலே தான் ஒலிம்பிக்போட்டியில் கால்பந் தாட்டம் சேர்க்கப்பட்டது. இவ்வாறு 1896ம் ஆண்டு கிரிஸ் நாட்டில் எதென்ஸ் நகரிலும் 1990ம் ஆண்டு அமெரிக்கா நாட்டில் செயின்ட் லூயிஸ்நகரிலும்1908ம் இங்கி லாந்து நாட்டில் இலண்டன் நகரிலும் 1912இல்சுவிடன் நாட்டில் ஸ்டாக்ஹோம் நகரிலும் 1916இல் ஜெர்மனி நாட்டில் டெர்லின் நகரிலும் (இது 1ம் உலகப் போரின்காரணமாய் நடைபெற வில்லை) மற்றும் 1920ம் ஆண்டு பெல்ஜியம் நாட்டின் ஆன்ட் வெர்ப் நகரிலும் 1924இல் பிரான்ஸ். பாரிஸ்நகரிலும், 1928இல்நெதர் லாந்து ஆம்ஸ்டர் டாம் நகரிலும், 1932இல் அமெரிக்கா லாஸ் ஏஞ்சல்ஸ் நகரிலும்.1936இல் ஜெர் மனி டெர்லின் நகரிலும், 1940இல் ஜப்பான்டோக்கியோ நகரிலும்,(இது போரின்காரணமாய் நடைபெற வில்லை).மற்றும்1944இல் இங்கிலா ந்து இலண்டன் நகரிலும், 1948இல் இங்கிலாந்து இலண்டன் நகரிலும், 1952இல் பின்லாந்து ஹெல்சிங்கி நகரிலும்,1956இல் அவுஸ்திரேலியா மெல்பான் நகரிலும், 1960இல் இத்தாலி ரோம் நகரிலும், 1964இல் ஜப்பான் டோக்கியோ நகரிலும். 1968இல்அமெக்சிக்கோ, அமக் சிலோ சிட்டியிலும். 1972இல் ஜெர்மனி மூனிச் நகரிலும். 1976இல் கனடா மாண்ட்சியஸ் நகரிலும், 1980இல் ரஷ்யா மாஸ்கோ நகரிலும், 1984இல் அமெரிக்கா லாஸ் ஏஞ்சல்ஸ் நகரிலும், 1988இல் தென் கொரியாவில் சியோல் நகரிலும் 1992இல் ஸ்பெயின் பார்சிலோனா நகரிலும், 1996இல் அமெரிக்கா அடலாண்டா நகரிலும். 2000இல் அவுஸ்திரேலியா சிட்னி நகரிலும் இவ் விளையாட்டு விழா நடந்தேறியது.

ஒலிம்பிக் விளையாட் டானது ஐந்து வட்ட கோடுகளை ஒன்றித்த சின்னமாக தமது சின்னத்தினை கொண்டுள்ளது இவை ஐந்து கண்டங்களினை சுட்டுவனவாய் உள்ளன. இதில் ஐந்துநிறங்களும் காணப்ப டுகின்றன.இதில்பச்சை அவுஸ்தி ரேலியா கண்டத் தினையும். மஞ்சள் ஆசியா கண்டத்தினையும். நீலம் ஐரோப்பா கண்டத்தினையும். கறுப்புஆபிரிக்கா கண்டத்தினையும் சிவப்புஅமெரிக்கா கண்டத் தினையும்கொண்டு காணப்ப டுகின்றது.

**இளையதம்பி வரதராஜன்**



சாய்ந்தமருது அல்ஹிலால் வித்தியாலயத்தில் அதிபர்.ஐ.எல்.ஏ.மஜீத்தின் முயற்சியால் அமைக்கப்பட்ட விளையாட்டு முற்றத்தின் தோற்றத்தை படத்தில் காணலாம். (படம் முபா)

## றூமி கப் சுற்றுப்போட்டி

(ஜலீல்)

அர்-றூமி ரவல்ஸ் பிரைவெட் லிமிட்டெட் ஆதரவில் கல்முனை சந்தாங்கேணி பொது விளையாட்டு மைதானத்தில் கல்முனைடொப்றேங் விளையாட்டு கழகம் நடாத்தும் றூமி கப்-2000 சுற்றுப் போட்டியில் 20 ஓவர்கள் கொண்ட கடின பந்து கிரிக்கட் சுற்றுப்போட்டியில் 12 அணிகள் மோதிக்கொண்டன.

ABCDஎன4 பிரிவுகளாக பிரிக்கப்பட்டு போட்டிகள் நடைபெற்றது. கால் இறுதிப் போட்டியில் கல்முனை ஹொலி பீலட் விளையாட்டு கழகமும். காத்தான்குடி யுனைடெட் விளை யாட்டுக்கழகமும் மோதிக் கொண்டன.

நாணய சூழற்சியில் வெற்றி பெற்ற காத்தான்குடி யுனைடெட் வி.க முதலில் துடுப்பெடுத்தாடியது. 20ஓவர்கள் நிறைவில் 9விக்கட் இழப்புக்கு 150ஓட்டங்களினைப் பெற்றது. பைறூஸ் 57ஓட்டங்களினைப் பெற்றுக் கொடுத்தார். பந்து வீச்சில் கல்முனை ஹொலிபீட் அணியின் இஸ்ஹாக் 4ஓவர்கள் பந்து வீசி 25ஓட்டங்களினைக் கொடுத்து 3விக்கட்டுக்களினைக் கைப்பற்றினார்.

பதிலுக்கு துடுப்பெ டுத்தாடிய கல்முனை ஹொலிபீட் விளையாட்டுக் கழகம் 19.4 ஓவர்களில்சகல விக்கட்டுக் களையும்இழந்து 132ஓட்டங் களினைப் பெற்றனர். றிபாங் 36ஓட்டங்களினைப் பெற்றார். பந்து வீச்சில் காத்தான்குடி யுனைடெட் வி.க அம்ஜத் 4ஓவர்கள் பந்து வீசி 14ஓட்டங்களை கொடுத்து 3விக்கட்டுக்களினை கைப்பற்றினார் கால் இறுதிப் போட்டிக்கு காத்தான்குடியுனைடெட் தெரிவா கியது.

### "ஆசிய நாடுகளுக்கு பெருமை தேடிக்கொடுத்தவர் சுசந்திகா"



அவுஸ்திரேலியாவின் தலைந கரான சிட்னியில் இடம்பெற்ற 200மீற்றர் போட்டியில் மூன்றாவது இடத்தைப்பெற்று வெண்கலப் பதக்கத்தை தனதாக்கிக் கொண்ட சுசந்திக்காஆசியநாட்டு வீராங் கனை என்ற பெருமை பெறுகிறார்.

இலங்கை வரலாற்றில் பொன்எழுத்துக்களால் பொறிக் கப்பட வேண்டியவர் சுசந்திக்காவே ஆகும். நாட்டில் சமாதானம் நிலைக்கவேண்டும். நீதியான அரசியல் நடைபெறவேண்டும் என்பதற்காக அவர் தலையில் மஞ்சள் நிறப்பட்டி அணிந்து கொண்டுபோட்டியில் பங்கேற் றியதும் குறிப்பிடத்தக்கதாகும்.

தற்போதுஉலக விளை யாட்டு அரங்கிலே இலங்கைக்கு பெருமைதேடிதந்தமுதல் வீராங்க னையும்ஆசியநாட்டு வீராங்கனை யும் சுசந்திக்காவே ஆகும்.

# வாசகர் நெஞ்சம்

## சுகாதாரம் பேணுவோம்!



"நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்" நோயற்ற வாழ்வு வேண்டுமெனில் பேணவேண்டும் சுகாதாரத்தை.

வடிகால்கள் அமைக்கப்படுவதன் நோக்கத்தினை மக்கள் உணர வேண்டும்! நீர் வடிந்து செல்வதற்காக அமைக்கப்படுகின்ற வடிகால்கள் இன்று குப்பை கூளங்களால் நிரம்பிக் கிடக்கின்றது.

இதன் பின் விளைவுகளை மக்கள் அறியாதிருப்பது வேதனைக்குரியது! குறிப்பாக, இது மழைக்காலம் குப்பைகளால் நிரம்பிக்கிடக்கின்ற வடிகால்களில் நீர் தேங்கி நிற்குமானால் நுளம்புகளும், நோய்க்கிருமிகளும் பெருகி பாரிய விளைவுகளை ஏற்படுத்தும் என்பது திண்ணம்.

மேலுள்ள புகைப்படமானது ஏறாவூரின் பிரதான பாடசாலை ஒன்றின் அருகாமையில் எடுக்கப்பட்டதாகும். எனவே, இது சம்பந்தப்பட்ட அதிகாரிகள் தீவிரமாக செயலில் இறங்கி தகுந்த நடவடிக்கைகளையும். பொதுமக்களுக்கு இது சம்பந்தமான அறிவுரைகளையும் வழங்குதல் அவசியம்! சுகாதாரம் பேணுவோம்! சுகமாய் வாழ்வோம்!

**எஸ்.ஏ.ஸர்மினா**
**ஏறாவூர்**

## சுத்தம் சுகம் தருமல்லவா?

மட்டக்களப்பு பெரிய ஆஸ்பத்திரியில் நோயாளர்களையும், காயக்காரர்களையும் வாட்டுகளுக்கு ஏற்றிக் கொண்டு தள்ளிச் செல்லும் வண்டில்கள் சுத்தம் செய்யப்படாமல் இருக்கின்றன.

நோயாளர்களுக்குஇதுதெரியாவிட்டாலும் பார்த்திருப்பவர் களுக்கு மிகுந்த அருவருப்பை ஏற்படுத்துகிறது.

"சுத்தம் சுகம் தரும்" என்பார்கள். ஆகவே கூடியமானவரையில் மேற்குறிப்பிட்ட வண்டில்களை சுத்தமாக வைத்திருக்க உயர் அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டுகிறேன்

**எஸ்.பீ.ராஜா**
**மட்டக்களப்பு**

## ஆன்மிகம் அறிவோம்

ஆன்மிக வாழ்க்கையில் மிக முக்கியமானது தியானமாகும். தியானம் செய்யாத மனிதன் உயர்ந்து போன நாணற் புல்லைப் போன்றவன். மீண்டும் அதிக அளவுநீர்,உரவளம் கிடைக்கு மட்போது துளிர் விட்டு புல் முளைக்கின்றது. தியானம் செய்யாத மனிதர்கட்கு ஆன்மீக வழிகாட்டல் பயிற்சி மூலம் உயிர்த்துடிப்பு கிடைக்கின்றது. தியானம் வழியாக மனதில் மேற்பரப்பிற்குக் கீழே ஆழ மூழ்கி, மேற்பரப்பில் வரக்கூடிய ஆசைகளைப்பற்றி அடிமட்ட த்திலே அறிய முடிகின்றது. நமது ஆசைகள் பெரிய மரங்களாகி வளர்வதற்கு முன்பாகவே, வெட்டி வீழ்த்த முயற்சிக்க வேண்டும். அப்பொழுது நாம் நமது மனதை அடக்கி ஆளலாம். தியானத்தில் அமரும் போது, சில சமயங்களில் பலவித மாசுபடிந்த எண்ணங்கள் மேலே எழும்புகின்றன. ஆகவே தூய்மைப்படுத்தும் முயற்சிகளில் ஈடுபடல் நன்று. தொடர்ந்து முயற்சிக்க வேண்டும். நமது ஆத்மாவின் அடி ஆழத்தில் நமது செயல்களுக்கான ஆட்களை பொருட்களை. இடங்களை விட்டு புனிதமானபயணத்தை இறைவ னின் துணையுடனும் ஆன்மீக வழிகாட்டியின் துணையுடனும் தொடரவேண்டும்.

ஆகவே." இளைதாக முள்மரம் கொல்க, களையுநர் கைகொல்லும் காழ்த்த இடத்து" என்னும் திருக்குறளுக்கேற்ப ஜெபம் தியானத்தின் மூலம் முள்ளான கொடிய மரங்களை வெட்டி விட்டு, நற்குணங்களை வளர்த்து, தியானத்தைக்காக்க கொண்டொழுகி. ஆன்மீகம் வாழப்பண்ணுவோம்.

**அருட்சகோ.ஞா.மரியநாதன்**
**மட்/குருக்கள்மடம்**

# ஓயாத அலைகள் நான்கு நடவடிக்கையால் 20 கிலோமீற்றரை கைப்பற்றியுள்ளோம். புலிகள் அறிவிப்பு!

(வவுனியா நிருபர்)

**தென்மராட்சி கிழக்கில் ஓயாத அலைகள் நான்கு நடவடிக்கை களினால் இருபது சதுர கிலோ மீற்றர் பரப்பளவு படையினரிடம் இருந்து மீட்டுள்ளதாக விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர்.**

தொடர்ந்து படை நிலைகள் மீது விடுதலைப்புலிகள் எறிகணை பீரங்கித் தாக்குதல்களை நடத்தி வருவதாகவும் அறிவித்துள் ளனர்.

இதேவேளை சனி, ஞாயிறு இரு தினங்களிலும் கள நிலவரம் சற்று தனிந்திருந்தபோதும் நேற்று காலையில் சண்டை உக்கிரம் பெற்றுள்ளது

காலை முதல் நண்பகல் வரை ஆட்டிலறி தாக்குதல்களை படையினர் புலிகளின் பிரதேசங்களை நோக்கி நடத்தியுள்ளனர்.

இதனால் வலிகாமம் வடக்குப் பகுதி மக்கள் மத்தியில் பதட்டநிலை காணப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.




## மூதூரில் ........

ரப்பின் ஒருங்கிணைப்பாளராகக் கடமையாற்றியுள்ளார்.

**காயமடைந்தோர் விபரம்**

முகமது ஹனிபா சலிம், பாலநகர் முகாரி ஜெசிம் (ஆசிரியர்), முஹம்மது இப்றாகீம் தௌபீக் (நெய்தல்நகர்), ஜமால் மர்சுக்-பால நகர், செய்யது அலவியூதப் (நோக்ஸ் றோட்), குத்தூஸ் நியாஸ் (பாலநகள்) காசி முகம்மது முபீன் (கூபீ நகர்), யக்கீர் முகைதீன் ஜலீம் (ஆசிரியர் அக்கரைச்சேனை), அப்துல் ஜவ்பார் உனைஸ் (அரபிக் கல்லூரி வீதி மூதூர்), முகம்மது ஹனிபா ஜமீல் (மூதூர்), தாஹீர் (மெய்பாதுகாப்பாளர் கிண்ணியா), முகம்மது ஹனிபா பலீல் (தக்குவா நகர்), சதக்கு முகமது முஜீப் (பாலநகர்), பக்கீர் குட்டி அமீர் காஜியார் (ஓய்வு பெற்ற இரகசியப் பொலிஸ் உத்தி யோகத்தர்),அப்துல் சலாம் நஜீம் (முகாமைத்துவ உதவியாளர் நெய்தல் நகர்), பீரமுகைதின் ஐயூப் கான் (அக்கரைச்சேனை), ஜெய்னுதீன் முபாறக்(பாலநகர்)

மேலும் அடையாளம் காணப்படாத இருவர் உயிரிழந்துள்ளனா. அவாகளா கிண்ணியாவை சேர்ந்த ஒருவரும், மூதூரைச் சேர்ந்த ஒருவர் ஆவர் எனத் தெரிவிக கப்படுகிறது.

உயிரிழந்தவர்களின் ஜனா சாக்கள் நேற்று மாலை நல்லடக்கம் செய்யப் பட்டன. மூதூர் நகரம் ஒரே சோக மயமாக காட்சி தருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## கறுத்தப்பால சோதனைச் சாவடியில் ஆசிரியர்கள் கையொப்பம் மாணவர்கள் பாதிப்பு

(நமது நிருபர்)

செங்கலடி கறுத்தப் பாலமூடாக இராணுவக் கட்டுப் பாடற்ற பகுதிப் பாடசாலைகளுக்குச் செல்லும் ஆசிரியர்கள் செங்கலடி கறுத்தப்பால இராணுவ சோத னைச் சாவடியில் கை ஒப்பமிடுமாறு இராணுவத்தினர் பணித்துள்ளனர்.

இவ் உத்தரவைத் தொடர்ந்து தினமும் கடமைக்குச் செல்லும் ஆசிரியர்கள் இராணுவ சோதனைச்சாவடியில் கையொப்ப மிடுவதால் பாடசாலை வகுப்புக ளுக்கு உரிய நேரத்துக்கு செல்ல முடியாது உள்ளதாக அசிரியர்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

காலை 8.00 மணிக்கு ஆரம்பிக்க வேண்டிய வகுப்புக்கள் கையொப்பமிடும் காலதாமதம் காரணமாக 9.30மணிக்கே ஆரம் பிக்க வேண்டியுள்ளது இதனால் மாணவர்கள் கல்வி பாதிக்கப் படுவதாகவும் தெரிவித்துள்ளனர்.

## மாணவன்.........

வத்தில் கோரகல்லிமடுவைச் சேர்ந்த சிவகுரு கிஷோக்காந் (20) என்ற கிரான் மகாவித்தியாலய மாணவன் காயமடைந்து மட்டக்களப்பு வைத்தி யசாலையில் அனுமதிக்கப்பட்டி ருந்தார்.

நேற்று மேலதிக சிகிச் சைக்காக கொழும்பு தேசிய வைத் தியசாலைக்கு அனுப்பி வைக்கப் பட்டுள்ளார்.

இவர் துப்பாக்கிச்சூட்டில் காயமடைந்தது தொடர்பாக இவரது உறவினர்கள் மனித உரிமை ஆணைக்குழு, சர்வதேச செஞ்சி லுவைச் சங்கம் என்பவற்றிற்கு முறைப்பாடு செய்துள்ளனர்.

## அகிலேஸ்வரனை.......

பயங்கரவாதக் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு தடுத்துவைக்கப்பட்டிருந்த அகிலேஸ்வரனை கண்டி நீதி மன்றத்தில் ஆஜர்படுத்தி விடுதலை செய்யுமாறு உயர்நீதிமன்ற நீதியரசர்கள் உத்தரவிட்டுள்ளனர்.

## சுயேச்சைக்குழு.........

இச்சம்பவம் நேற்று பகல் 12மணியளவில் இடம்பெற்றது. சம்பவம் பரபரப்படைய கண் காணிப்பு நடவடிக்கையில் இருந்த படையினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். மக்கள் பீதியுடன் சிதறி ஓடினர்.

எனினும் சிறிது நேரத்தின் பின் செங்கலடி நகரம் வழமை நிலைக்குத் திரும்பியது.

## தபால் மூல வாக்களிப்பு நீடிப்பு

(காத்தான்குடி நிருபர்)

கடந்த 28,29 ஆகிய தினங்களில் தபால்மூலமான வாக்களிப்பு நடை பெற்ற போது வாக்களிக்கத் தவறிய வர்கள் எதிர்வரும் 10 ஆம் திகதி வரை வாக்களிக்கலாம் என அறி விக்கப்பட்டுள்ளது. தகுந்த கார ணங்கள் கூறப்படும் போது மட்டுமே இச்சலுகை வழங்கப்பட்டுள்ளது. அதாவது வாக்களிப்பு நடைபெற்ற தினங்களில் சொந்த இடங்களில் இல்லாதவர்கள், பிரயாணத்தில் ஈடுபட்டு இருந்தவர்கள் போன்றவர் களுக்கு இச்சலுகை வழங்கப் பட்டுள்ளது.

## மட்டக்களப்பு மாவட்ட வாக்காளர் அட்டை விநியோகம் சுறுசுறுப்பு!

(ஏறாவூர் நிருபர்)

மட்டக்களப்பு மாவட்ட இராணுவ கட்டுப்பாடற்ற பிரதேசங்களிலும் தங்கு தடையின்றி வாக்காளர்கள் அட்டைகள் விநியோகம் செய்யப் பட்டுவருகிறது.

மட்டக்களப்பு மாவட்ட தபால் ஊழியர்கள் மாலை நேரங் களிலும் வாக்காளர் அட்டைகளை விநியோகித்து வருகிறார்கள்.

மட்டக்களப்பு மாவட்டதில் இரண்டு லட்சத்து 75 ஆயிரத்து 485 மொத்த வாக்காளர்களில் 70 ஆயிரத்து 681பேர் விடுவிக்கப்படாத பகுதிகளில் வசிக்கின்றனர்.

மட்டக்களப்பு, பட்டியிருப்பு, கல்குடா, ஆகிய மூன்று தொகு தியை கொண்ட மட்டக்களப்பு மாவட்டத்தில் மட்டக்களப்பு பகுதி கள் 16 சதவீதமும் பட்டியிருப்பு தேர்தல் தொகுதியில் 46சதவீதமும் கல்குடா தொகுதியில் 24 சதவீதமான வாக்காளர்களும் இரா ணுவ கட்டுப்பாடற்ற பிரதேசங்களில் உள்ளனர். என தெரிவிக்கப் படுகிறது.

## ஹிஸ்புல்லாஹ்வின் ....

சுற்றி வளைத்து தேடுதல் நடவ டிக்கையில் ஈடுபட்டனர். இச்தேடுதல் நடவடிக்கையில் நூற்றுக்கு மேற் பட்டோர் விசாரணைக்கு உட்படுத் தப்பட்டதாக தெரிய வருகிறது.

இதேவேளை கடந்த 30ம் திகதி பிற்பகல் கிரானை அடுத் துள்ள கோரகல்லிமடுவில் பிரதிய மைச்சர் ஹிஸ்புல்லாஹ்வின் வாக னத் தொடரணி மீது தாக்குதல் நடத் தப்பட்டு 48 மணித்தியாலத்திற்குள் இரண்டாவது தாக்குதல் இடம் பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது.

## ரணில் விக்கிரம சிங்க மட்டக்களப்பு விஜயம்

(காத்தான்குடி நிருபர்)

எதிர்க்கட்சித் தலைவர் திரு. ரணில் விக்கரமசிங்க எதிர்வரும் புதன்கிழமை (04 - 10 - 2000) மட்டக்களப்பு விஜயம் செய்ய வுள்ளார். ஐக்கிய தேசியக்கட்சி யினால் மட்டக்களப்பு காத்தான்குடி, ஏறாவூர், ஓட்டமாவடி ஆகிய இடங்களில் ஒழுங்கு செய்யப்பட் டிருக்கும் பிரசாரக் கூட்டங்களில் பேசவுள்ளார். என மட்டுமாவட்ட ஐ.தே.க வேட்பாளர் அப்துல் மஜீக் தெரிவித்தார்.


**உடன் தேவை**

Adobe PageMaker 6.5 இல் தமிழ் அச்சுக்கோர்ப்பு மற்றும் பக்க வடிவமைப்பு வேகமாகச் செய்யக் கூடியவர்கள் உடன் தேவை. தகுதியானவர்கள் தகுந்த அத் தாட்சிகளுடன் எதிர் வரும் 04-10-2000 புதன் அன்று காலை 10 மணிக்கு தினக்கதிர் காரியாலயத்துக்கு வருகை தரவும்.

நிர்வாகி
தினக்கதிர்






**பொதுஜன ஐக்கிய முன்னணி**

மட்டக்களப்பு மாவட்டத்தில் பூரண அபிவிருத்திக்கு
பொதுஜன ஐக்கிய முன்னணியின்
முதன்மை வேட்பாளர்
**கே. எஸ் கணேசமூர்த்தி** அவர்களுக்கு
வாக்களிப்போம் !



**வீணை**



ஈ.பி.டி.பி



நேர்மையான அர்ப்பணிப்பு!
சோர்வின்றி தொடரும் முயற்சி!
சோதனையால் கலங்காத தெளிவு!
வீணைக்கே வாக்களிப்போம்!


இப்பத்திரிகை வேல்ட் வொயிஸ் பப்ளிக்கேஷன் நிறுவனத்தினரால் ஈஸ்ரன் கிராபிக்ஸ் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.